# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

27-2-66



ஜெனரல்

வெஸ்ட் மோர்லண்ட்

முகப்பில்:

# வெஸ்ட்மோர் லாண்ட்

போரை விட மோசமானது எது? என்ற கேள்வியையும் கேட்டுவிட்டு "அவமானம் போரைவிட மோசமானது; அடிமைத்தனம் போரைவிட மோசமானது'' என்ற ஒரு அரிய விளக்கத்தையும் ஒரு இடத்தில் தந்துள்ளார் போரில் சமாததர் என்று சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்ட சர்ச்சில்.

'அகௌரவம்' 'அடிமைத்தனம்' என்று சர்ச்சில் துரைமகனுர் வேருெரு கோணத்தில் கூறியவைகளைத் தங்கள் தங்கள் விருப்பத்துக்கும் போக்குக்கும் உரியவகையில் பயன்படுத்துகிருர்களோ என்று எண்ணத்தக்க வகையில் வியட்நாம் நாளுக்கு நாள் அமைதிக்கு அப்பால் விரைந்து சென்று கொண்டிருக்கிறது.

கடந்த இருபத்து ஐந்தாண்டுகளில் நிகழ்ந்துவரும் "மூன்ருவது உலகப் பெரும்போர்'' என்று அழைக்கப்படும் வியட்நாம் யுத்தத்தில் இந்தநிமிடமும் 1,000,000 வீரர்கள் மொத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கிருர்கள்.

அமெரிக்கக் குடியரசுத்தலைவரின் உறக்கத்திலும் நினைவை விட்டகலாத ஒரு மாபெரும் பிரச்னையாக இருக்கிறது வியட்நாம். 1966-ம் ஆண்டு இறுதியில் வியட்நாமில் உள்ள அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை 4,000,000 ஆக உயர்ந்துவிடும். ஒவ்வொருநிமிடமும் டாலர்கள் மழைநீர் போல வாரி இறைக்கப்படுகிறது.

1961-ம் ஆண்டிலிருந்து சென்ற ஆண்டு இறுதிவரை 1484 அமெரிக்காகள் வியட்நாமியப் போரில் இறந்துபட்டிருக்கிருர்கள் 7,337 பேர்கள் காயமடைந்துள்ளனர்.

போர்முனையை யல்லாமல் மற்றைய துறைகளிலும் அமெரிக்கா வியட்நாமில் பலவகைகளில் தன்னைத் தானே ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. பல்வேறு துறையிலும் பிரசித்திபெற்ற 1000 நிபுணர்கள் வியட்நாம் பூராவிலும் சமுதாய சீர்திருத்தப் பணியில ஈடுபட்டு ஆண்டொன்றுக்கு 5000 டாலர்கள் செலவழித்துக் கொண்டுள்ளனர். 4682-பள்ளிகள், 1900 நீர் நிலைக் கிணறுகள், 12000 கிராமிய சுகாதார நிலையங்கள், 718 தொழிற்சாலைகள் அமைத்துக் கொடுத்திருக்கிறது அமெரிக்கா. சென்ற ஆண்டில் மட்டும் 7,000,000பாடப்புத்தகங்கள் வியட்நாமிய சிறுவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு தெற்கு வியட்நாமில் உள்ள கடைசிக் குடிமகன் வரை அமெரிக்க ஈடுபாடு இரண்டறக் கலந்துள்ளது.

முகப்பிலே தெற்கு வியட்நாமில் உள்ள அமெரிக்கப் படைகள் அத்தனைக்கும் தலைமை தாங்கும் ஜெனரல் வெஸ்ப் மோர் லாண்ட் என்பவரது உருவத்தைச் சிலைவடிவில் காண்கிறீர்கள்.

பொறுப்பில் இவர் ஒருராஜதந்திரியாக, இராணுவ வீரராக, தொழில் வல்லுநராக, அரசியல் வாதியாக எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு மனிதனுக இயங்கவேண்டியவராக இருக்கிருர்.

6000 இராணுவ அறிவுரையாளர்கள், 115000 வீரர்கள், 10000-மாலுமிகள், 17,500 விமானிகள், 45000 கடல் சாதனங்கள், 1000-ஹெலிகாப்டர்கள், 550 விமானங்கள ஆகிய அனைத்தும் இவரது உடனடி கண்காணிப்பில் உள்ளன.

இதையல்லாமல் இவரது கட்டுப்பாட்டினகீழ் இருப்பவை, 150-போர்க் கப்பல்கள், அமெரிக்காவின் ஏழாவது கப்பல்படையைச் சேர்ந்த 70000 பேர்கள்; தாய்லாந்திலுள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் முதலியனவாகும்.

"அவர்களால் (வியட்காங் படையினர்) முடியுமென்ருல் நம்மால் மட்டும் ஏன் முடியாது?'' எனக்கேட்டு, தனது வீரர்களுக்கு உணர்ச்சியூட்டும் இவர் வார முழுமையும ஓய்வில்லாமல் உழைக்கிருர். ஆறடி உயரமுள்ள இந்த உருவம் புகைப் பிடிப்பதே கிடையாது; மது அருந்துவதோ மிகக குறைந்த அளவுதான். பாாப்பதற்கு மெலிந்த இந்த மனிதரா அத்தனைப் பெரிய யுத்தத்தில் தலைமை தாங்குகிருர்? என்று உடன் இருக்கும் இராணுவத்தினரே சந்தேகிப்பார்களாம். மிக இளைய வயதிலேயே இராணுவத்தில உயர்ந்த பதவிக்கு வந்தவர் இவர்.

வியட்நாமில்தான் அமைதி இல்லையே என்றெண்ணியோ என்னவோ ஓய்வு தேடி ஹானலூலு சென்ற அவரை அமெரிக்கப் பத்திரிகையொன்று சும்மா விடவில்லை. புகழ்பெற்ற ஒரு சிற்பியையும பிரசித்தி பெற்ற ஒரு பத்திரிகை நிருபரையும் அனுப்பி அவரது உள்ளத்தையும் உருவத்தையும் படம் பிடிததுவர அனுப்பியது.

வெஸ்ட் மோர் லாண்ட் ஓய்வுடன் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் போதும் வியட்நாமிலிருந்து தகவல்கள் வந்ததாம். அமெரிகசத் தலைவரிடமிருந்து தொலைபேசி அழைப்புகள் வருமாம். இடையிடையே இவரது பதில்கள், மற்றும் படிப்புகள், கையெழுத்திடும் அலுவல்கள்.

இத்தனைக்கும் இடையில் ஒன்றரை மணி நேரததில் நிருபர்கள் பேட்டி முடிந்தது; சிற்பி ஒருவர் அவரது சிலையை குறுகிய நேரத்தில் முடித்துவிட்டார். 50-பவுண்டு எடையுடன், கட்டணம் செலுத்தி யாருக்கும் தெரியாமல் நியூயார்க் பத்திரிகை அலுவலகம் வரை கொணரப்பட்டு பின்னர் 1965-ம் ஆண்டின் மனிதர் என்று அந்த இதழால் கௌரவிக்கப்பட்டவர் இவர்.

> "இராணுவ உடுப்பணிந்தோர், சரிததிரத்திலேயே இதுவரை காணுத ஒரு குழபபம் மிகுந்தது 'வியட்நாம்' போர்!' என்று கூறுவது நிலைமையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

> "வியட்நாம் யுத்தம் ஒரு இராணுவப் பிரச்னை மட்டுமல்ல; மனமாற்றம் தேவைப்படும ஒரு அரசியல் பிரச்னையும் கூட''

என்று வெஸ்ட்மோர்லாண்ட் கூறியிருப்பதிலிருந்து ஏன அங்கு அமைதி கானல்நீராகவே போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கான விளக்கம தெரிகிறது.

துப்பாக்கி முனைக்கு பொறுப்பு வகிப்பவர் கூறிவிட்டார் பரிகாரம் போர்க்களத்திலிருந்து மட்டும் கிடைத்துவிடாது என்ற உண்மையை.

ஆனுல் அவரினும் பொறுப்புள்ள மற்றுமுள்ளோர் அதை உணர வேணடுமே?

—அரசியல் மாணவன்

# காஞ்சி

மலர் 2 27—2—66 இதழ் 31


## 'பொய்மான்' கரடு!

எட்டடுக்கு மாடி! கண்கவரும் வண்ணம்! காலத்தைக் காட்டும் வடிவம்! அந்த எழிலகத்தின் மேல்மாடியில் உலவும் மங்கை, பெருத்த உடலினளாயின், என்ன கெம்பீரம்! என்ன கெம்பீரம்! என்று புகழ்வர்; எலும்புக் கூடாக இருந்திடின், பூங்கொடி போன்றாள்! என்று புகழ்வர்! கட்டடத்தின் வனப்பும் அதற்கு அடிப்படையாக உள்ள செல்வம் பற்றிய நினைப்பும் கண்ணை மறைக்கும், கருத்தைக் குலைக்கும், உண்மையை விரட்டும், பொய்யுரை பேசவைத்திடும்—மிகப் பெரும் பான்மையினரை.

எந்தப் பொருள் குறித்தும் ஏதுமறியாத காரணத்தால் எதையும் பேசமாட்டார், எவரிடமும் பேசமாட்டார்; ஆயின் அவர் இரும்புப் பெட்டியிலே தங்கப் பாளங்கள் இருப்பதாகச் 'செய்தி' உலவினால் போதும், 'கண்டபடியா பேசுவார்! நிறை குடம், தளும்பாது, குறைகுடம்தான் தளும்பும்' என்று பதிகம் படிப்பர்.

மேலதிகாரி இராமாயணப் பிரியர் என்று தெரிந்து விட்டால், பணிமனையினர் சுவற்றிலே 'ராம நாமம்' எழுதிவிடுவர்! கண்டார் களிப்படைவர் என்று! அவர் மாறுதலாகி அந்தனி என்பார் வந்திடின்? சுவற்றினைச் சுத்தப்படுத்துவர்; இது உலக வாடிக்கை; நத்திப் பிழைத்தாக வேண்டும் என்ற நினைப்பினரின் உலகம்!!

அண்ணாந்து பார்க்கப் பார்க்க, கழுத்து வலிப்பது மட்டுமல்ல. கருத்துத் தெளிவும் கடுகி ஓடிவிடும், (மன) மயக்கம் மேலிட்டுவிடும்.

மாடிவீட்டு மங்கை எனினும் எழிலற்றவளை அழகி என்று ஏன் கூறிட வேண்டும், எப்படிக் கூறிட முடியும் என்று எண்ணுபவர்கள் அதிகம் பேர் இருக்க முடியாது. பணம் பத்தும் செய்யும் என்பார்கள்; அதிலே மயக்கமூட்டி, பொய்யுரை பேசவைப்பதும் ஒன்று.

வலிவு குறையக் குறைய—உள்ளத்தின் வலிவு—இந்த மனப் போக்கு—தளர்ச்சி—அதிகமாகிவிடும்.

இடத்தின் உயரம் அதிகமாக அதிகமாக, இந்த மயக்கமூட்டும் 'சக்தி'யும் அதிகமாகிவிடும்.

உருவு கண்டு மனமயக்கம் கொள்ளாமை, நிலை கண்டு நாக்கு பிறழாமை, செல்வம் கண்டு அடி பணிந்து கிடந்திடாமை, அதிகாரம் கண்டு இளித்துக் கிடந்திடாமை, இலாபம் எதிர்பார்த்து இச்சகம் பேசிடாமை, இவைகள், சமூகத்தில் இலட்சியங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன; இவை பற்றிய நல்லுரைகள் நிரம்ப உள்ளன, ஆனால் மிகப் பலரால் இவற்றினை நடைமுறையாக்கிக் கொள்ள முடிவதில்லை,

ஆனால் இந்த இயல்பு, ஜனநாயக முறைக்கு முழுக்க முழுக்கக் கேடு விளைவிப்பதாகி விடுகிறது. அறிவாற்றல் கண்டு பாராட்டுதல், தொண்டு கண்டு தலை வணங்குதல், தோழமை கண்டு கனிவுடன் இருத்தல், இவைகள் ஜனநாயகத்தைச் செம்மைப்படுத்த வல்ல இயல்புகள். உருவம், நிலை, செல்வம், அதிகாரம் இவை கண்டு உள்ளொன்று வைத்து புறமொன்று எனும் இயல்பு, சமூகத்தின் நிலையைக் கீழேகொண்டு செல்லும்.

ஆட்சியில் உள்ளவர்கள் இத்தகைய 'இச்சகம்' பேசுவோர்களிடம் நம்பிக்கை கொள்ளக்கூடாது என்று அரசியற் புலவர்கள் கூறுகின்றனர். நமது வள்ளுவப் பெருந்தகையோ இடிப்பார் இல்லாத மன்னன் கெட்டே போவான் என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்.

ஆட்சியிலுள்ளவர்கள், உயரத்தான் இருப்பார்கள்; ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறைதான் தரையில் நடக்கிறார்கள்; பிறகோ இளித்துக் கிடப்போர், இடுப்பொடிந்தோர், இலாபம்தேடுவோர். இட்டுக் கட்டுவோர், இன்னிசை கூட்டுவோர், நத்திக் கிடப்போர், நாமாவளி வல்லுநர். 'ஆமாம்' போடுவோர், அதற்கென்ன! என்போர், இன்னோரன்ன பிறர் அமைத்திடும் பகழ் ஏணிமீதுதான் ஏறி நிற்பர்! நின்றோர் பற்பலர், வீழ்ந்தோர் மிகப் பலர்!!

இந்த நிலையில் பெரும்பாலோர் உள்ளனர் என்பதற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணம், எதைச் செய்தாகிலும் தான் வாழ வழி கண்டாக வேண்டும் என்ற நினைப்பு; தன்னலம்.

இந்த இயல்பு குறையக் குறையத்தான் ஜனநாயகம் வளரும்; வாழும்; சமூகம் புதுவாழ்வு, முழுவாழ்வு பெற்றிடும்.

அறிவாற்றல், தொண்டு. ஆகியவையாலன்றி, ஜாதி சமயம், குடிப் பெருமை, செல்வ மிகுதி என்பவைகளால் ஏற்பட்டுவிடும் 'பிடி' அகற்றப்படும் என்ற நம்பிக்கையின் பேரில்தான் ஜனநாயகம் எழுப்பப்பட்டிருக்கிறது.

ஜனநாயக முறை இருந்திடும்போதும், அறிவாற்றல், தொண்டு என்பவைகளால் அல்லாமல், ஜாதி குலம், பணம் ஆகியவைகளால், ஆதிக்கம் பெற்றிடும் போக்கு அனுமதிக்கப்பட்டுவிடுமானால், சமூகம் எந்தப் பலனையும் பெற்றிடமுடியாது; அது கழுகுக்குப் பச்சை நிறம் பூசி, கிளி என்று கூறிட முற்படுவதற்கு ஒப்பாகும்.

இவை எவருக்கும் விளங்கிடத்தக்க, எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தயங்கிடாத உண்மைகள்! சிக்கல் இல்லை துளியும்.

ஆனால், தன்னலத்தை மட்டுமே எண்ணிக் கிடந்திடின், இவை பற்றிய தெளிவு, பொருளுள்ள முறையில் பயனபடுவதில்லை; ஊமையன் கண்ட கனவாகிப் போகும்.

இத்தனைப் பெரிய பணபலம் படைத்தவர்களை, ஜாதிச் செல்வாக்குள்ளவர்களை, மீறி நடந்திட முடியுமா! நம்மால் ஆகுமா! நாமோ ஏழைகள் என்ற எண்ணம் மனதிலே புகுந்திடின், ஜனநாயகப் பயிரிலே நச்சுப் பூச்சிகள் கப்பிக்கொண்டு விட்டன என்று கூறிவிடலாம்,

கூடுமானவரையில், தமிழகத்தில், ஜெமீன், மிட்டா மிராசு, குலத் தலைவர், நாட்டாண்மை என்பனபோன்ற உயர்நிலை காரணமாக இருந்துவந்த ஈடு எதிர்ப்பற்ற செல்வாக்கு—ஆட்டிப் படைக்கும் அதிகாரம்—வெகுவாகக் குறைந்துவிட்டது; உள்ள மிச்சம் மீதியும் மறைந்துகொணடு வருகிறது.

அவரை மீறி ஒருவராலும் ஒரு காரியமும் செய்திட முடியாது என்ற பேச்சும், இந்தப் பக்கம அவர் வைத்ததுதான் சட்டம் என்ற மிரட்டலும், அவர் ஒருவர் நமதுபக்கம் இருந்தால்போதும் மற்ற எதைப்பற்றியும் நாம் கவலைப்படத தேவையில்லை என்ற பேச்சும், இன்றும் சிற்சில இடங்களில் கிளம்புகின்றன என்றபோதிலும், முன்பு இருந்துவந்த முடுக்கும் துடுக்குப் போக்கும் வெகுவாகக் குறைந்துவிட்டன.

பணம், ஜாதி, பழமைப் பிடிப்பு என்பவை காரணமாக ஆதிக்கம் செலுத்த நினைபபவர்களேகூட முன்பு போல கட்டளையிட்டுவிடுவதில்லை; ‘இந்தக் காலத்தில் எவன் நம்முடைய பேச்சைக் கேட்கிறான். ஒரு கட்டு திட்டம், மட்டுமரியாதை, இருந்தால்தானே! அவனவன் தன்னிச்சையாக நடக்கிறான். என்னமோ நான் சொல்லவேண்டியதைச் சொல்லுகிறேன், பிறகு நடப்பது நடக்கட்டும்’ என்ற முன்னுரையுடன்தான் ஆட்சி நடத்தப்பார்க்கிறார்.

நூறு கிராமம் அவர் சொற்படி; சேரி முழுவதும் அவருக்கு அடக்கம் என்றெல்லாம் இருந்து வந்த பேச்சு மிகவும் தளர்ந்து காணப்படுகிறது. நைந்து போன சரிகை வேட்டியைப் பக்குவமாக மடித்துப் போட்டுக்கொள்வது போன்ற நிலை.

பழயமுறை செல்வாக்குகள் அடியோடு பட்டுப் போய்விடவில்லை; இன்னும் பட்டக்காரர், பாளையக்காரர், குன்னியூரார் குததாலத்தார், வாண்டையார் வடபாதிமஙகலததார், செய்யூரார் சூணாம்பேட்டார், நெடும்பலத்தார் மூப்பனார் எனற பெயர்களைக் கூறிடக் கேட்கிறோம். அவர்களின் ‘குடிபடைகள்’ அடங்கி ஒடுங்கித்தான் நடந்துகொள்வார்கள். தாம் காட்டிய வழிதான் நடப்பார்கள் என்றுதான் நம்புகிறார்கள். ஆனால் அவர்களே தமது நடவடிக்கைகள் காரணமாகத் தாம் கால் ஊன்றி நிற்கும் இடத்திற்குக் கீழே வெடிப்புகளையும் விரிசல்களையும் உண்டாக்கிக்கொள்கிறார்கள்; அவர்களிலே அறிவுத்தெளிவு மிக்கவர்கள் இதனை உணருகிறார்கள்; பலர் புரிந்துகொள்வதில்லை; முடிவதில்லை.

‘குடிபடைகள்’ என்று இவர்கள் கூறிக்கொள்வது தமது பண்ணை ஆட்களை மட்டுமல்ல, தமது பார்வைபடும் இடத்தில் நடமாடும் சகலரையும், உறவின் முறையார் அனைவரையும்; கொள்வது கொடுப்பது என்பதால் தொடர்புகொண்டார் அனைவரையும்; மொத்தமாகக் கூறுவதானால் ‘தமது ஜாதியார்’ அனைவரையும்.

அவர்கள் அவரிடம் அததனை மதிப்பு வைத்திருந்த காரணம் என்ன? அந்தப் பெரிய புள்ளிக்கு, சமூகத்தில், அதிகாரிகள் வட்டத்தில், சர்க்காரில் இருந்து வந்த செல்வாக்கைக் கண்டு.

இப்போது? ஓடுகிறாரே அத்தனைப்பெரியவர், பெரியவர், பெரிய மாலையாகத் தூக்கிக்கொண்டு, “முதல் மாலை என்னுடையது! முத்துச்சாமியிடம் சொல்லிவிட்டேன்! முப்பது ரூபாய் மாலை! கழுத்திலிருந்து கணுக்கால் வரையில் தொங்கும்! போட்டோ எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்! அவர் மோட்டாரைவிட்டு இறங்கியதும் நம்ம மாலைதான் முதலில்!” என்றல்லவா கூறுகிறார். யாருடைய வரவை எதிர்பார்த்து, கால்கடுக்க நிற்கிறார்? களஞ்சியம் நிரம்பி வழியும் செந்நெல்லை, உழவன் அறுத்துக் குவிக்கும்போதுகூட, அவர் அல்ல அவருடைய ‘ஏஜண்டு’தான், தரையில் அல்ல, நாற்காலியில் உட்காருவார்! இப்போது, அவ்வளவு பெரியவர், நிற்கிறார்வழிமேலே விழிவைத்து, வருகிறாரா மந்திரி! வந்துவிட்டாரா தலைவர்! என்று கேட்டபடி. வருபவர் அமைச்சர், ஆனால், நிலபுலத்துக்கு அதிபர்! பத்துத் தலைமுறை பணக்காரர்! ஜாதிக்குப் பெரியவர்! குலத்தின் தலைவர்! என்ற விருதுகள் பெற்றவரா? ஒருவர் இருவர் இருக்கலாம். மற்றவர்கள்? மந்திரிகள்! அவ்வளவுதான்! ஆனால் அவர்களுக்காக மாலையும் கையுமாக ‘ஐயா’ நிற்பதைப் பார்க்கும்போது அவருடைய ‘குடிபடைகள்’ எண்ணாமலா இருக்கிறார்கள், ‘ஐயாவோட விவகாரம் இவ்வளவுதானா!” என்று. அந்த நினைப்பு, அவர்களைக குடிபடை என்ற நிலையிலிருந்து விடுவித்து விடுகிறது.

ஐயாவிடம் காட்டி வந்த பக்திபோன்ற மரியாதையை மந்திரிகளிடம் காட்ட ‘குடிபடை’கள் முன் வருமா என்றால, அதுவும் இல்லை; மந்திரிகளின் முன் பின் நிலைமைகள், நடவடிக்கைகள் யாவும் அவர்களுக்கு மனப்பாடம், அவர்கள் செல்வம், ஜாதி குலம், பரம்பரை பாத்யதை என்பவைகளால் செல்வாக்குப் பெற்றவர்கள் அல்ல; ஓட்டு பலத்தால் உயர அமர்ந்தவர்கள் என்பது புரிகிறது; அந்த ஓட்டு தாங்கள தந்தது எனற நினைப்பு வருகிறது; வரும்போது தன்னாலே தலை நிமிருகிறது, காதினிலே பாரதியாரின் பாடல் ஒலிக்கிறது, எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று

எனவே, பெரிய புள்ளிகள் தங்களின் அரசியல் இலாப நோக்கததுக்காக பதவியில் உள்ளவர்களுக்குப் பராக்குக் கூறி நிற்பது, அவர்களுக்கு நெடுங்காலமாக இருந்து வந்த செல்வாக்கையே செல்லரித்துக் கொண்டிருக்கிறது.

அமைச்சர்கள் பற்றியோ! பொதுமக்கள் நன்றாகப் பார்த்துப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்; வெடித்திடும் வாணம் உதிர்த்திடும் வண்ணப் பூக்கள் நொடியிலே காட்சி காட்டி மறைந்து போவதுபோல, பதவியால் கிடைக்கும் பளபளப்பு மங்கி மடிந்ததும், ‘முன்னாள்’ களைத் தேடித் தேடிப் பார்த்திடவேண்டிய அளவுககு நிலைமை மாறிவிடுவதை. ஆகவே அவர்கள் நிரந்தரமான செல்வாக்கைப் பெறத்தக்க அளவிலும் வகையிலும் மக்கள் மனதிலே இடம் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

அதிலும் காங்கிரஸ் அமைச்சர்களைப் பற்றி அவ்வப்போது கிளப்பிடும் சேதிகளோ, கொஞ்ச நஞ்சம் எழக் கூடிய பற்று பாசம், மதிப்பு இவைகளைக் கல்லி எடுத்து விடுவதாக இருக்கிறது.

ஊழல்! ஊழல்! ஊழல்! நிர்வாகத்தில் மோசடி! பொதுப் பணம் நாசம்! உறவினருக்குச் சலுகை! நண்பர்களுக்கு லைசென்சு! முதலாளிகளுடன் கூட்டு! கள்ளக் கணக்காளரிடம் கனிவு!—இப்படிப் பட்ட பேச்சுகள், அடிபடாத இடமோ, நாளோ இல்லை என்று கூறலாம்.

அவர் பேரில் புகார்! இவர் பேரில் விசாரணை! இவர் விலகினார்! இவர் விலக்கப்பட்டார்! இவர்மீது வழக்கு!—

(15-ம் பக்கம் பார்க்க)

தம்பி

# வெள்ளை மாளிகையில்! (4)

உலகிலேயே கடைந்தெடுத்த பொய்யர்கள் இந்த வெள்ளையர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன்.

உலகிலேயே இவர்களை மிஞ்சிடும் குடிகாரர்கள் இல்லை என்று குற்றம் சாட்டுகிறேன்.

மிக மோசமான சூதாடிகள் இந்த வெள்ளையர் என்று குற்றம் சாட்டுகிறேன்.

கொடிய கொலைகாரர்கள் இந்த வெள்ளையர்கள்!

சாந்தியை—சமாதானத்தைக் குலைத்தவர்கள் இந்த வெள்ளையர்.

காமவெறி பிடித்தலையும் கயவர்கள், இந்த வெள்ளையர்.

மோசடிகள் பல செய்திட்ட பேர்வழிகள் இந்த வெள்ளையர்!

ஆகவே நீதிமன்றத்தினரே! இந்த வெள்ளையர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.


"வெள்ளையர்கள் குற்றவாளிகளே! தூக்குத்தண்டனை விதிக்கிறேன் இவர்களுக்கு."

என்ன அண்ணா! டக்ளஸ் டில்மன் மீது தொடுக்கப்பட்ட கண்டன வழக்குபற்றிய விவரம் தருவதாகக் கூறிவிட்டு, இது ஏதோ புதிதாக, அதிர்ச்சிதரத்தககதாக ஒரு வழககுபற்றி குறிப்பிடுகிறாயே என்றுதானே தமபி! வியப்படைகிறாய். விளக்கம தருகிறேன்.

வெள்ளையர் குற்றம் பல புரிந்தவர்கள்; 'பஞ்சமாபாதகம்' புரிந்தவர்கள் என்பதாக குற்றம் சாட்டப்படுகிறது; வெள்ளையர் பஞ்சமாபாதகம செய்தவர்களே எனபது மெய்ப்பிககப் படுகிறது; நீதிமன்றத தலைவர், வெள்ளையருக்குத் தூக்குததண்டனை விதிக்கிறார். நாடகத்தில்!!

அமெரிக்காவில், 'வழக்கு' என்றோர் நாடகம்; வெள்ளையரின் கொடுமைகளைக் கண்டிக்கும் நோக்கத்துடன், நியூயார்க் நகரிலேயேகூட இந்த நாடகம், ஒருமுறை அல்ல; இரு முறை நடத்தப்பட்டதாம்.

நாடகம் தீட்டி நடித்துக்காட்டும் பொறுப்பை மேற்கொண்டவர்கள், நீக்ரோக்களின் விடுதலை இயககத்தின பல வடிவங்களில் ஒன்று என்று கூறத்தகக 'கருப்பு முஸ்லீம்' எனும் அமைப்பினர். அந்த அமைப்பினர், நீக்ரோககள், தங்கள் உரிமைகளுககாக வெள்ளையரிடம் கெஞ்சிக கூத்தாடிக்கிடக்கத் தேவையில்லை; அது கேவலம்; தமககுள் ஒரு எழுச்சியுடன் கூடிய ஒற்றுமையை ஏறபடுத்திக்கொணடு, "கருபபு இனததவர்! ஆம்! கருப்பு!! அதனால் என்ன? கேவலம என்ன அதிலே! என்று அடிததுப் பேசவேண்டும், நிமிர்ந்து நிற்கவேணடும்; கிருததவ மாரககத்தை விட்டுவிட வேணடும்; முஸ்லீம்களாகிவிட வேணடும்; தனி உரிமை, தனி நாடு, தனி அரசு கேட்டுப் பெறவேணடும என்ற புரட்சியை நடாததிக் காட்டிடும் இயககம்.



## இந்த வாரம்-
## இந்த நாட்டில்......

**புதுடில்லி, பிப். 18**—ரூபாயின் மதிப்பைக் குறைக்கும் யோசனை ஏதுமில்லையென திட்ட மந்திரி அசோக் மேதா மக்களவையில் அறிவித்தார். தனது சோஷலிஸக் கொள்கை சம்பந்தமான சாகோர் பேச்சு, சர்க்காரின் கருத்து அல்ல என்றும் அவர் கூறினார்.

**சென்னை, பிப். 18**—என். ஜி. ஓ.-க்களுக்கான கிராக்கிப்படி உயர்த்தப்படுவது பற்றி பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், இதற்கொரு மாற்றுத் திட்டம்கூட யோசனையிலிருப்பதாகவும் முதலமைச்சர் பக்தவத்சலம் அறிவித்துள்ளார்.

**பம்பாய், பிப். 19**—ஓடம்பகதூர், ஓடம் சலாமத் ஆகிய இரு கப்பல்கள் இரு கிழமைகளுக்கு முன்னேயே வந்து சேர்ந்திருக்கவேண்டியவை, இதுவரையில் காணப்படவில்லை யெனவும், அவற்றில் பயணிகள் யாருமிருந்தார்களா என்பதுபற்றி எதுவும் தெரியவில்லை யெனவும் தெரிகிறது.

**புதுடில்லி, பிப். 19**—நாகாலாந்து தொடர்பாக அதன் பிரதிநிதிகளுடன் பிரதமர் இந்திரா காந்தி பேச்சு நடத்தினார் - மீண்டும் ஏப்ரிலில் பேச்சு நடத்தப்படலாமெனத் தெரிகிறது.

**தஞ்சாவூர், பிப். 18**—தஞ்சை மாவட்டத்திற்கு நில வரி வஜா செய்யும்படியும், இதற்காக ஜமாபந்தி வரையில் காத்திராமல், உடனடியாகச் செயல்படும்படியும் கலெக்டர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

**கல்கத்தா, பிப். 20**—உணவுக் கிளர்ச்சி தொடர்பாக நடைபெற்ற துப்பாக்கிச் சூடு காரணமாக உண்டான நிலைமையில் கல்கத்தாவிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள கல்வி ஸ்தாபனங்கள் அனைத்தும் மூடிவிடும்படி அரசு அறிவித்துள்ளது. நிலைமையைக் கட்டுப்படுத்த, வெளி மாநிலங்களிலிருந்தும் போலீஸ் தருவிக்கப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

**லட்சுமணபுரி, பிப். 20**-தற்போதைய கல்விமுறையை உடனடியாக மாற்றிப் புதுத் திட்டம் காணாவிடில் இன்னும் 15 ஆண்டுகளில் படித்தவர்களிடையே வேலையின்மைப் பெருகிவிடுமென்றும்-அதுவே பேரபாயமாகுமென்றும் திட்டக் குழு உறுப்பினர் ராவ் கருத்தறிவித்துள்ளார்.

**புதுடில்லி, பிப். 21**—வியட்நாம் விவகாரத்தின் தீர்வுக்கு இந்தியா தன்னாலானதைச் செய்து உதவுவதாகவும், கூடியவரை அந்த விவகாரம் பற்றி குறைகூறாமலிருக்கவும் இந்தியா ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க உதவி ஜனாதிபதி ஹம்ப்ரே அறிவித்துள்ளார். இந்திய-பாக். ஆகிய இரு நாடுகளுக்குச் சில நிபந்தனைகளின் பேரில் மீண்டும் ஆயுதஉதவிதர ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

**கல்கத்தா, பிப். 22**—மேற்குவங்க சட்டசபையில் புதிய பட்ஜெட் வாசிப்பின்போது வரிஉயர்வு, அதிகவரிபற்றிய காரசாரமான விவாதத்தில் அடிதடியும், கூச்சல் குழப்பமும் ஏற்பட்டு சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

அந்த இயக்கம், மேற்கொண்டுள்ள பிரசாரமுறையிலே ஒன்று நாடகம்; அந்த நாடகங்களிலே ஒன்றுதான் நான் மேலே குறிப்பிட்ட 'வழக்கு'

டக்ளஸ் டில்மன் மீது பொச்சரிப்பு காரணமாக வெள்ளை அதிகாரிகள் வழக்குத் தொடுத்ததுபற்றி குறிப்பிட்டபோது, கருப்பு இனத்தவர், மக்கள் மன்றத்திலே வெள்ளையர் மீது தொடுத்துள்ள 'வழக்கு'பற்றி நாடகம் நடத்தப்படுவது நினைவிற்கு வந்தது.

"நான் இல்லை அங்கே! இருந்திருந்தால்!!" என்று கூறுவார் நமது முதலமைச்சர் பக்தவத்சலனார்.

வெள்ளையர்—கருப்பர் மோதுதல். அதன் காரணமாக இரத்தக்களறி சதா நடைபெற்றுக்கொண்டிருக்கும் நாடு அமெரிக்கா! இருந்தும், அங்கே வெள்ளையனைத் தூக்குத்தண்டனை பெறசெய்கிறார்கள், நாடகத்தில், இங்கு? மிகச்சாதாரணமான, துளியும் பலாத்காரவாடை அற்ற, பிரச்சார நாடகமாடினாலும் என்ன நடக்கிறது! 'உதயசூரியன்' என்ற நாடகத்தில், தம்பி கருணாநிதி எந்தவிதமான 'பலாத்கார'ப் பிரசாரத்தையும் சேர்க்கவில்லை! ஆனால் 'உதயசூரியன்' என்று பெயர்!! பக்தவத்சலனாரின் அரசாங்கம், ஆடாதே! என்று உத்திரவிட்டது; 'உதயசூரியன்' நாடகம் நின்றுவிட்டது.

அமெரிக்காவில், வெள்ளையர் பஞ்சமாபாதகம் செய்வதாகவும், உலக மன்றத்தின் முன்பு அவர்கள் இழுத்து வந்து நிறுத்திவைக்கப்படுவதாகவும், வழக்கு நடைபெறுவதாகவும், தூக்குத்தண்டனை தரப்படுவதாகவும், கருப்பருக்கான ஒரு அமைப்பு, 'நாடகமாட' இடம் கிடைத்திருக்கிறது; நியூயார்க் நகரில்; போன நூற்றாண்டிலா? இல்லை! தம்பி! இப்போது, சில ஆண்டுகளுக்கு முன்பு!!

ஆனால், ஒருபுறம் இந்த அளவு 'உரிமை'உணர்ச்சி மதிக்கப்பட்டு வருகிறதென்றாலும், மற்றோர் புறத்தில் நீக்ரோக்களை ஒதுக்கிவைத்து, கேவலப்படுத்தும் கொடுமையும் நெளிந்துகொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலை கப்பிக்கொண்டிருக்கும் இடத்திலல்லவா, டக்ளஸ் டில்மன் குடிஅரசுத் தலைவரானார்; அவர்மீது நிறவெறியர் பாய்ந்திடாதிருப்பார்களா! அதன் விளைவுதான் டில்மன் மீது தொடுக்கப்பட்ட கண்டன வழக்கு.

குடிஅரசுத் தலைவர் பதவிக்குத் தகுதியானவர் அல்ல.

குடிகாரர்! கூத்திக்கள்ளன்!

மனப்பிராந்தி நோயால் தாக்கப்பட்டவன்!

வெள்ளைப் பெண்மணியைக் கற்பழிக்க முயற்சித்த காதகன்.

இவ்விதமான 'குற்றச்சாட்டுகள்!' ஆதாரங்கள்! சாட்சிகள்! வாதங்கள்! இதழ்களிலே கண்டனக் கணைகள்! இவ்வளவும், நிறம் கருப்பு என்பதால்,

டில்மன் நாணயமானவர் என்பதிலே இதற்கு முன்பு எவருக்கும் எள்ளளவு சந்தேகமும் எழுந்ததில்லை.

டில்மன் நீக்ரோக்களின் விடுதலைக்காகப் பொறி பறக்கப் பேசிடும் போக்கினரும் அல்ல; புரட்சி இயக்கத் தொடர்பும் கொண்டவர் அல்ல; பொறுத்துக்கொள்ளும் பயிற்சி பெற்றவர்; பொறுப்பினை நனகு உணர்ந்தவர்.

நீக்ரோக்களிலே, சிறிதளவு செல்வம் செல்வாக்கு கிடைத்துவிட்டால், வெளிச்சம் போட்டுக்கொண்டு திரிபவர்கள் சிலர் இருந்தனர்; இவர் அவ்விதமான போக்கினரும் அல்ல.

தம்பி! நிறம் கருப்பு என்றால் என்ன என்று நாம் இங்கு எளிதாகப் பேசிவிடலாம்; கருப்பில் அழகியடி! என்று சிந்து பாடிடலாம்; ஆனால் அமெரிக்காவிலே உள்ளவர்களுக்குத்தான் தெரியும் 'கருப்பு' என்னென்ன கொடுமைகளை, இழிவுகளைத் தாங்கிக் கொள்ளச் செய்கிறது என்கிற விவரம்.

அமெரிக்க நீக்ரோக்கள் எல்லோருமே கருப்பு நிறம் அல்ல! அவர்களிலே பலர், மாநிறம், வெள்ளை நிறம்கூட! ஆனால், இனம் நீக்ரோ, நீக்ரோ இரத்தம் கலந்திருக்கிறது என்று தெரிந்தால் போதும், அமெரிக்க சமூகத்திலே இடம் கிடையாது! ஒதுக்கிடம்! ஓரம்! குப்பை மேடு!!

இந்தக் கொடுமையிலிருந்து தப்பித்துக்கொள்ள எண்ணுவர், சிறிது வெள்ளைநிறமாகப் பிறந்துவிடும் நீக்ரோக்கள். யாருக்கும் தெரியாமல், பிறந்த இடத்தை விட்டு நெடுந்தொலைவு சென்று, வெள்ளையருடன் வெள்ளையராக வசித்து வர விரும்புவாராம். அவ்வளவு துடிப்பு, பாவம் அவர்களுக்கு. கர்த்தர்! தமது கருணையால் நம்மை கருப்பு நிறத்துடன் படைப்பிக்கவில்லை; நமது நிறமோ வெள்ளை! நாம் வெள்ளையர் வாழும் பகுதியில் சென்று இருந்துவிடலாம்; யாரும் கண்டுபிடிக்க மாட்டார்கள்; கருப்பு நிறத்தவர்மீது வீசப்படும் இழிவிலிருந்து, கொடுமையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைப்பார்களாம்.

அவ்விதமான எண்ணம் கொண்டு, ஒருவருக்கும் தெரிவிக்காமல், பல ஆண்டுகளுக்கு முன்பே, வீட்டை விட்டு ஓடிவிட்டவள், டில்மன் பெற்றெடுத்த பெண்!

எங்கே இருக்கிறாள், எப்படி இருக்கிறாள் என்பதே தெரியாது; தொடர்பு அடியோடு அற்றுப் போய்விட்டது. ஆனால், எங்கோ வெள்ளையருடன் வெள்ளை மாதாக இருந்துகொண்டிருக்கிறாள்.

அந்தத் துக்கம் டில்மன் மனதைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது; அதையும் பொறுத்துக்கொள்கிறார்;

மனைவி, காலமாகிவிட்டாள்; மகளோ தலைமறைவு; மகனோ கல்லூரியில் உலவுகிறான், அப்பா! ஒரு நொடியில் நீக்ரோக்களின் இழிவுகளைத் துடைத்துவிடுவார் என்ற நம்பிக்கையுடன்; சூழ இருக்கும் வெள்ளை அதிகாரிகளோ, "தலையாட்டிக் கொண்டிருப்பதானால் தர்பாரில் இடம்! தன்னிச்சையாக நடந்துகொள்ள முனைந்தால் தூக்கி எறியப்படுவாய்!" என்று எச்சரிக்கிறார்கள்; பார்வையால்; விஷமத்தனம் கலந்த புன்னகையால்.

இவ்வளவும் புரிகிறது; ஆனால் எதையும் வெளியே வெளிப்படையாகப் பேசுவதற்கும் இல்லை.

சிக்கலான பிரச்சினைகள், அய்யப்பாடுகள், மனக் குழப்பங்கள், மனக் குமுறல்கள் ஏற்படும்போது, எது முறை? எதனை எவ்விதம் செய்திடலாம்? என்பது பற்றிக் கலந்து பேசிடவும், தக்க கருத்து பெற்றிடவும், தன்னலமற்று, அறிவுத் தெளிவுடன், துணிவுடன் யோசனை கூறிடத் தக்கவர்களைப் பெற்றிடவும் முடியாது போய்விடும்போது, பொறுப்புகளை மேற்கொண்டு விட்டுள்ளவர்களின் தவிப்பும் தத்தளிப்பும் எவ்விதம்

## இந்த வாரம்- வெளி நாட்டில்.....

**லண்டன், பிப். 18**—ஹல் தொகுதியில் நடைபெற்ற துணைத்தேர்தல் ஒன்று பெருவெற்றி பெற்றதனால், நாடுமுழுவதும் பொதுத்தேர்தலை நடத்த சர்க்கார் விரும்பலாம் என்றாலும், அப்படி இந்த ஆண்டே தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லையென்று தெரிகிறது.

**சிரியா, பிப். 23**—சிரியா சட்டசபை கலைக்கப்பட்டு, சில அமைச்சர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், அவர்கள் விசாரணைக்குக் கொண்டுவரப்படுவார்கள் எனவும், புதிய அமைச்சரவை ஒன்று தற்காலிகமானதாக அமைக்கப்பட்டுள்ளதாகவும், அறிவிக்கப் பட்டுள்ளது.

**சாலிஸ்பரி, பிப். 19**—வியட்நாம் பிரச்னையில் தன்னாலான உதவிகளைச் செய்வதாக யு. எஸ். அரசுக்கு, ரொடீஷியப் பிரதமர் இவான்ஸ்மித் அறிவித்துள்ளார்.

**லண்டன், பிப். 20**—பாதுகாப்புத் திட்டம்பற்றியும், சூயசுக்குக் கிழக்கில் பிரிட்டனின் பங்குபற்றியும் ஏற்பட்ட தகராறு தொடர்பாக கடற்படை அமைச்சர் கிறிஸ்டோபர் மேஹியு ராஜினமா செய்தார். இது சம்பந்தமாக இன்னும் பல அட்மிரல்களும் பதவி விலகலாம் எனத் தெரிகிறது.

**இம்பால், பிப். 20**-இந்தியன் ஏர்லைன்ஸின் டகோடா விமானமொன்று, இம்பால் குலிதல் நிலையத்தில் இறங்குகையில், புரபல்லர் கழன்று விழுந்ததனால், விமானம் சேதமடைந்தது என்றும், பயணிகளுக்குச் சேதமில்லையெனவும் தெரிகிறது.

**வாஷிங்டன். பிப். 20**—காஷ்மீர் தகராறு தொடர்பாக இந்தியா, பாக். இரண்டின்மீதும் சமாதான பைசல் ஒன்றை உலல நாடுகள் திணிக்கக்கூடும் என்று அமெரிக்கக் காங்கிரஸின் தூதுக்குழு ஒன்று கருத்தறிவித்துள்ளது.

**டோக்கியோ, பிப். 20**—அணு ஆயுதங்களை எடுத்துக் செல்லக்கூடிய சோவியத் யூனியனால் தயாரிக்கப்பட்ட 'இலியூஷின் 28' என்ற வகையைச் சேர்ந்த அணுகுண்டு வெடிவிமானங்கள் செஞ்சீனாவில், 300 வரையில் இருப்பதாக ஜப்பானிய அரசு அறிவித்துள்ளது. ஆனால் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் சாதனங்கள் எதுவும் சீனாவிடமில்லையென்று ஜப்பான் உதவி மந்திரி திரு. ரெய்சோ மட்சுனோ அறிவிக்கிறார்.

**வாஷிங்டன். பிப். 21**—யு. எஸ். அரசின் வியட்நாம் கொள்கையைப் பற்றிய எதிர்ப்பு, அமெரிக்க செனட்டில் கடந்த கிழமை எழுப்பப்பட்டதையொட்டி, ஜனாதிபதி ஜான்சனுக்கும், அவரது எதிர்ப்பாளர்களுக்கு மிடையே, எதிர்பார்க்கப் பட்டதையும்விட அதிக அளவு மனவேறுபாடு ஏற்பட்டுவிட்டதெனத் தெரிகிறது.

**லண்டன், பிப். 21**—தென் ஆப்பிரிக்க பெட்ரோல் தொடர்ந்து ரொடீஷியாவுக்கு அனுப்பப்படுமானால், தென்னாப்பிரிக்காவுக்கும் எண்ணெய் எதுவும் அனுப்பக்கூடாதென தடைபோடும் படி, ஆப்பிரிக்க நாடுகள் ஐ. நா. மன்றத்தைக் கேட்க நேரிடும் என்றார் பிரதமர் வில்சன்.

இருக்கும் என்பதனை விளக்கிட முடியாது. அத்தகைய அல்லலால் தாக்குண்டவர்கள் பற்றி எழுதப்பட்டுள்ள ஏடுகளிலிருந்து அது பற்றித் தெரிந்துகொள்ளலாம்; ஓரளவு; முழு அளவு அல்ல.

தெளிவும் துணிவும் பொறுப்பும் பொறுமையும் மிகுதியாக இருக்கவேண்டும்.

தன் சொந்தக் கருத்தைத் திணிக்க வேண்டும் என்ற நினைப்பு எழலாகாது.

பிரச்சினையை எந்தவிதமான விருப்பு வெறுப்புகளுடனும் பிணைத்து விடலாகாது.

தவருன கருத்தைத் தந்திரமாகப் புகுத்தும் முயற்சியை மேற்கொள்ளக் கூடாது.

என் யோசனைதான்! என் திட்டம்தான்! என்ற எக்களிப்பைக் கொட்டிக் காட்டக் கூடாது.

கேட்பவர், கருத்தற்றவர்; அறிவுப் பஞ்சத்தால் நம்மை வந்து நாடுகிருர் என்ற தப்புக் கணக்கும் போடக்கூடாது.

பிரச்சினையை அணுகும்போது, தனது நிலையை அளவுகோலாக்கிக் கொள்ளாமல், பொறுப்பினை மேற்கொண்டுள்ளவரின் நிலையினை அளவுகோலாகக் கொள்ளவேண்டும்.

கேட்பவர் மனம் மகிழவேண்டும் என்பதற்காகத் தித்திப்பு கூட்டக் கூடாது; பிரச்சினையை விட்டுவிடட்டும் என்பதற்காகக் கசப்பினையும் கலக்கக்கூடாது.

இவ்வளவு இலக்கணமும் பொருந்தியுள்ளவர்கள், கிடைத்தால் மட்டுமே, பொறுப்பினை மேற்கொள்பவர்கள், தங்கள் மனதிலே எழும் அய்யப்பாடுகளை நீக்கிக்கொள்ள, சிக்கல்களைப் போக்கிக்கொள்ள, வழி காண்பர். டில்மன், மனதிலே என்னென்ன அய்யப்பாடுகள் எழுந்திருக்கக்கூடும் என்பதுபற்றி ஒரு பட்டியல் தயாரித்துப் பார்த்தால், தம்பி! தலை சுற்றும்; அவ்வளவு இருக்கத்தான்செய்யும். யாரிடம் கலந்துபேசுவார்? அவர் நிறமோ கருப்பு! இருக்கும் இடமோ வெள்ளை மாளிகை!! சூழ உள்ளவர்களோ வெள்ளை ஆதிக்கப் பாதுகாவலர்! மக்களோ இருபிரிவு; நிறத்தால், இனத்தால்; ஒன்றை ஒன்று பகைத்துக்கொண்டு. இவர் மனதிலே எழும் அய்யப்பாட்டிலே முக்கியமானதோ, நிறம் பற்றிய நினைப்பு அற்று, நீதியாக, நேர்மையாக, அரசியல் சட்டதிட்டம் ஒழுங்குமுறை கெடாதவகையில் ஆட்சியை எப்படி நடத்திச்செல்லமுடியும் என்பது பற்றி. இதற்கு யாரிடம் யோசனை கேட்பார்! நீக்ரோ தலைவர்களிடம் கேட்க முனைந்தாலே புருவத்தை நெறிப்பர், பகைகக்குவர்; இனம் இனத்தோடு என்று பழிசுமத்துவர் வெள்ளையர்.

அவர்கள் எதையோ கூறிக்கொள்ளட்டும் என்று எண்ணி நீக்ரோ தலைவர்களுடன் கலந்து பேசினுல், அவர்கள் எந்தவிதமான யோசனை கூறுவார்கள், பெரும்பாலான நீக்ரோ தலைவர்கள்; 'படமுடியாதினித் துயரம்! பட்டதெல்லாம் போதும்' என்ற மனப்போக்கினராகிவிட்டனர். வெள்ளையரின் நிறவெறி அவர்களின் உள்ளத்தில் வெந்தழலை மூட்டிவிட்டது. அவர்கள் நிதானமாக நடந்துகொள்ளச் சொல்லவே மாட்டார்கள்!!

வெள்ளை இனத்தவரிடம் கலந்து பேசினுல்? நீக்ரோ மக்களின் 'சாபம்' தன்னுலே வந்துசேரும். வெள்ளையரின் எடுபிடி என்பார்கள்! இனத்தைக் காட்டிக் கொடுக்கும் கயவன் என்பார்கள்! கூசாமல் பழி சுமத்துவார்கள்!

இரு நிறத்தினரையும் கேட்காமல், இருந்திடின்? இதயம் சுக்குநூருகிறது, சிக்கல் நிறைந்த பிரச்சினைகளால்,

தம்பி! "கை கூப்பியும் கண்ணீர் பொழிந்தும் கர்த்தரின் அருளைப்பெற பாசுரம் பாடியும், அடிமை நான் ஐயனே! கருணைகாட்டுவீர்! அறியாமை பிடியில் உள்ளேன், தெரியாமல் பிழை செய்தேன், பொறுத்தருளுவீர்! நான் உமது அடிமை, உமது உடைமை!" என்று கெஞ்சிடும் நிலையில் நீக்ரோக்கள் இல்லை, ரொட்டித்துண்டுகளை வீசினுல் விழுந்தடித்துக்கொண்டு ஓடி பொறுக்கி எடுத்துக்கொள்ளும் இழிநிலையை விரும்பிடும் போக்கில் இல்லை. அவர்களின் கண்கள் பொழிய வேண்டிய அளவு கண்ணீரைப் பொழிந்துவிட்டன; வறண்டுவிட்டன; இப்போது அங்கிருந்து கிளம்புவது நீர் அல்ல; நெருப்பு; கோபப் பொறிகள்!! கொடுமைகளைத் தாங்கித்தாங்கி அவர்களின் உள்ளம் எரிமலையாகிவிட்டது. அவர்கள் இச்சகம்பேசவோ, பச்சைச் சிரிப்பு சிரித்துக்காட்டி 'பண்டம்' கேட்கவோ தயாரில் இல்லை. அவர்களை நிமிர்ந்து நிற்கச் செய்துவிட்டனர், பலப்பல தலைவர்கள்; பல்வேறுவகையான தலைவர்கள். தொடர்ந்து, எழுச்சியும் விழிப்புணர்ச்சியும், புரட்சிப் போக்கும் ஊட்டப்பட்டு வரப்பட்டதால், அவர்களை அடக்கிவைப்பதும் முடியாததாகிவிட்டது, "ஆராரோ" பாடி தூங்கவைக்கவும் முடியாததாகிவிட்டது, பகட்டு, போலி, பளபளப்பு, பசை, இவைகளைக் காட்டி மயங்க வைக்கவும் முடியாததாகிவிட்டது; அவர்கள் உரிமையைக்கேட்கின்றனர்; உரத்த குரலில்; நிமிர்ந்துநின்று; நீதியின் பேரால் மட்டுமல்ல, எங்களாலும் எல்லாம் முடியும்! என்ற வலிவு காட்டி.

இந்த நிலையினை மிக வேகமானதாக்கிடுவதிலே முனைந்து வேலை செய்த அமைப்புகளிலே ஒன்றுதான தம்பி! நான் முதலிலே குறிப்பிட்டுக் காட்டியேனே, கருப்பு முஸ்லீம் என்ற இயக்கம்.

சட்டம், ஒழுங்கு, நீதி, நேர்மை, உலகப் போக்கு, உயர் தத்துவங்கள் ஆகியவைகளை விளக்கிக் காட்டியவர்களின் குரலைக்கேட்டு, மதிப்பளிக்காத நிறவெறியர்கள், எலிஜா முகமது என்பவர் துவக்கி நடத்தி வந்த கருப்பு முஸ்லீம் இயக்கத்தவரின் இடியோசை கேட்டு மிரண்டிடலாயினர். டக்ளஸ்டில்மன் காலத்திலே அல்ல தம்பி, டக்ளஸ் கதை; நான் குறிப்பிடும் கருப்பு முஸ்லீம் நடைமுறை நிகழ்ச்சி.

'கருப்பு முஸ்லீம்' இயக்கம் வெள்ளை நிறவெறியர் மனதிலே பீதியை மூட்டியது போலவே நீக்ரோக்கள் மனதிலே என்றும் இல்லாத ஒரு துணிவை ஊட்டிவிட்டது. எலிஜா முகமது துவக்கிய இயக்கம், எண்ணற்ற, நீக்ரோக்களை, வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் வீரம் பெறச்செய்தது; அவர்கள் ஒரு தனி வாழ்க்கை முறையே அமைத்துக்கொள்ளலாயினர். தனிப் பள்ளிக்கூடங்கள்; அங்காடிகள் தொழிலிடங்கள்; பணிமனைகள்! ஒட்டும் வேண்டாம் உறவும் வேண்டாம் இந்த வெள்ளையருடன்! என்று துணிந்து கூறினர். புதியதோர் தன்னம்பிக்கையும் பெற்றனர்.

'கிருத்துவ மார்க்கம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கத் தவறிவிட்டது. அமெரிக்க சர்க்கார் தவறிவிட்டது. எனவே அந்த மார்க்கமும் உமக்கு வேண்டாம்'

அந்த அரசிடம் பிடிப்பும் வேண்டாம்; நீதி வேண்டும்; விடுதலைவேண்டும்; சமத்துவம் வேண்டும்! இவற்றை ஒருவரும் தரமாட்டார்கள். நாமாகத்தான் பெற்றுக்கொள்ள வேண்டும். எப்படி? நாம் தனி! தனி இனம்! எனவே தனி அரசுவேண்டும்! தனி நாடு வேண்டும். என்று கூறிவிட வேண்டும். வெள்ளையருடன் ஒரே அரசில் வாழ்வது ஓநாய்களுக்கு மத்தியில் ஆடுகள் இருப்பது போன்றதே! நாம் யார்க்கும் குடியல்லோம!

எலிஜாவின இந்தப் பேச்சு, தத்துவமாகிவிட்டது; இயக்கம் மார்க்கமாகிவிட்டது; நீக்ரோக்களுக்கு என்றுமில்லாத அளவு 'தெம்பு' பிறந்துவிட்டது. முஸ்லீம் மார்க்கத்தினை மேற்கொண்டுவிட்டதாக இலட்சக் கணக்கானவர்கள் அறிவித்துவிட்டனர்.

தம்பி! இதழ்களில் பார்த்திருப்பாய், சென்ற திங்கள் உலகப் புகழ் பெற்றிடும் வெற்றி ஈட்டினுன் க்ளே என்ற நீக்ரோ குத்துச் சண்டை மாவீரன்! அவன், தன்னை 'முஸ்லீம்' என்றுதான் அறிவித்திருக்கிருன்.

ஏன் கருப்பாகப் பிறந்தோம் என்று ஏங்கிக் கிடந்தவர்கள் எழுந்து நின்று, ஆமாம்! கருப்பு! அதனுல் என்ன? கருப்பு, சிறப்பு! என்று முழக்கம் எழுப்புகிருர்கள், எலிஜா துவக்கிய இயக்கம் காரணமாக.

இப்படி! இப்படி! எல்லோரும் வாருங்கள்! வெள்ளை நிறத்தார்களைப் பற்றிப் பேசப் போகிறேன்.

பேசு! பேசு சகோதரா! பேசு!

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதருஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு. * திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா. பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'
மற்றும்
'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

ஒன்று கேட்கிறேன், சொல்லுங்கள் பார்ப்போம். நல்லது செய்த ஒரு வெள்ளையனைப் பார்த்ததுண்டா, நீங்கள்?

இல்லை! இல்லை!

போகட்டும், உங்கள் பேரில் பூட்டப்பட்டுள்ள பொருளாதாரத் தளைகள் பற்றித் தெரியுமா, உங்களுக்கு, சொல்லுகிறேன், காலையிலே எழுந்திருக்கிறீர்கள், படுக்கையை விட்டு; எலிகளும் கரப்பான் பூச்சிகளும் ஓடுகின்றன உங்கள் படுக்கையிலிருந்து. நான் சொல்வது சரிதானே?

உண்மைதான்! உண்மைதான்!

ஓடிப்போய் உங்கள் குழந்தையைப் பார்க்கிறீர்கள்; குழந்தையின் காதுகளை எலி கடித்துத் தினறுவிட்டதா என்பதற்காக! உண்மைதானே! சரிதானே நான் சொல்வது?

உண்மை! உண்மை!

கூரையிலிருந்து சுண்ணும்பு அடை மேலே விழுகிறது. ஓட்டைச் சட்டியிலே தண்ணீர்! அதைககொண்டு முகத்தைக் கழுவிக் கொள்கிறீர்கள். அப்படித்தானே?

ஆமாம் ஐயா! ஆமாம்! அப்படித்தான்.

தூக்கத்தைக் கழுவிவிட்டுவிட்டு, கந்தல் ஆடையை உடுத்திக கொள்ளுகிறீர்கள்; கடனுக்கு வாஙகியது; கடனைக் கட்டித்தீர்க்கவில்லை இன்னும்; உண்மைதானே?

ஆமாம்! சொல்லு ஐயா! சொல்லு! கொலல வேண்டும் வெள்ளையர்களை.

பிறகு, அதற்குப் பிறகு, செல்லுகிறீர்கள்...வெள்ளை எஜமானனிடம் வேலை செய்ய ......அயிசன்பர்க்! அவன் பெயர் என்று வைத்துக் கொள்ளுங்கள்; வெள்ளை எஜமானன.

ஆமாம்! வெள்ளை எஜமானனிடம் வேலை செய்கிறோம்.

எட்டுமணி நேரம் வேலை! வாரம் ஐந்து நாள்! மொத்தம் 44-டாலர் கூலி பெறுகிறீர்கள்.

ஆமாம்! 44-டாலர்!

வியர்வை சிந்தச்சிந்த நீங்கள் உழைத்து இந்த 44-டாலர் சம்பாதிக்கிறீர்களே இதைப் பார்த்துக்கொண்டிருக்கிருனே அயிசன்பர்க், அவன் 440-டாலர் சம்பாதிக்கிருன். நான் சொல்வது சரியா? தவரு?

முழுக்க முழுக்கச்சரி! உண்மை! அப்படிச்சொல்லு, அதை எல்லாம் சொல்லு.

கவலைப்படாதே சகோதரா! கவலைப் படாதே! அப்பட்டமான உண்மையைத்தான் சொல்வேன். எல்லோருக்கும் விளங்கும்படி, உள்ளதை உள்ளபடி சொல்லுவேன். நளெல்லாம் உழைக்கிறீர்கள். பிறகு இங்கே வருகிறீர்கள்—வந்து துணி வாங்குகிறீர்கள்; யாரிடம்? கோசன்பர்க்கிடம்!

ஆமாம்!

அயிசன்பர்க்கிடம் வேலைசெய்து வாங்கிய கூலியிலே ஒரு பகுதியை துணிக்காக கோசன்பர்கிடம் கொடுக்கிறீர்கள். பிறகு? நகைநட்டு வாங்குகிறீர்கள், கோல்ட்பர்கிடம்!

ஆமாம்...அப்படித்தான்......

வீட்டு வாடகை கட்டுகிறீர்கள்...... பென்பர்கிடம்!

ஆமாம் ஐயா! ஆமாம்!

கடன் வாங்குகிறீர்கள், கம்பெனியிடம்! கம்பெனி நடத்துவதுயார்? வீன்பர்க்!

அப்படிச் சொல்லு! அதைச்சொல்லு!

ஆனால், உங்களுக்கு எது தெரியவில்லை என்றால், நான் சொல்லிக்கொண்டு வந்தேனே அயிசன்பர்க், கோசன்பர்க், பென்பர்க், கோல்ட்பர்க், வீன்பர்க் இவர்கள் எல்லாம் அண்ணன் தம்பிகள்! ஒரே இனம்!! உழைக்கிறீர்கள்; கிடைப்பதை இந்தக் கும்பல் பறித்துக்கொள்கிறது. இதுதான், நான் சொன்ன பொருளாதாரத் தளைகள். புரிகிறதா!!

ஒரே சிரிப்பொலி! ஆரவாரம்!

தம்பி! நீக்ரோக்கள் குடி இருக்கும் பகுதி ஒன்று, நியூயார்க் நகரில், (Harlem) ஹார்லாம் எனும் பெயர் அந்த கும்பைமேட்டுக்கு; அங்கு தெருக் கோடியில் அடிக்கடி நடைபெறும் கூட்டம் பற்றியது நான் குறிப்பிட்டுக் காட்டியது. லோமாக்ஸ் என்பவர், கருப்பு முஸ்லீம்கள் பற்றிய விவரம் அளித்து எழுதியுள்ள ஏட்டில், இந்த நிகழ்ச்சிப் படமாக்கப் பட்டிருக்கிறது.

இந்தவிதமான பிரசாரம் நீக்ரோ மக்களிடம் என்ன விதமான மனப்பான்மையைக் கிள்ளிவிட்டிருக்கும்! அந்த மனநிலையில் உள்ள நீக்ரோக்களை; ஒரு நீக்ரோ குடி அரசுத் தலைவரான பிறகும் அடக்கி வைத்திட முடியுமா! அத்தனைக் கொடிய இனத் துரோகம் செய்திட யாருக்காகிலும் துணிவு பிறந்திடுமா! '

ஆனால் வற்புறுத்துகிறார்கள் டில்மனை—டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்யும் சட்டம் பிறப்பிக்கும்படி.

இந்த டர்னரைட் இயக்கந்தான், தங்களுக்காக உண்மையாகப் பாடு பட்டு வருகிறது; அதன் மீது வேண்டுமென்றே வெள்ளையர்கள் பழி சுமத்தி ஒழித்துக் கட்டப்பார்க்கிறார்கள் என்று நீக்ரோக்கள் எண்ணிக்கொண்டுள்ளனர்.

ஆனால் டில்மனைச் சூழ உள்ள வெள்ளைப் பேரதிகாரிகளோ, டர்னரைட் இயக்கம் கம்யூனிஸ்டு இயக்கம்; பலாத்கார இயக்கம் என்று வாதாடுகிறார்கள, ஒரு நீக்ரோ, குடி அரசுத் தலைவராகி விட்டதால் அந்த இயக்கம் தலைதுள்ளி ஆடுகிறது, ஒரு நீக்ரோ, நீக்ரோ இயககததிற்குத் தடை விதிக்கமாட்டார் என்ற தவறான நம்பிக்கையால்; ஆகவே தாங்கள், தங்கள் நிறததை மறந்து, அமெரிக்க நாட்டுக் குடிஅரசுத் தலைவர் என பதை நினைவிலேகொண்டு, அமெரிக்காவில் பயங்கரத்தையும் பலாத்காரத்தையும் மூட்டிவிட்டுப் பாழ்படுததும் டர்னரைட் இயக்கத்திற்குத் தடை விதிகக வேண்டும் என்று வலியுறுததுகிறார்கள்.

நீக்ரோ தலைவர்களோ டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்தால், இனத்துரோகி என்ற இழிவை ஏற்றுக் ஏற்றுக்கொள்ளவேண்டி வரும் என்று எச்சரிக்கிறார்கள். டில்மன், மிரட்டல் எச்சரிக்கை இவைகளைப் பொருட்படுத்தவில்லை. எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும், தீரயோசித்து நியாயமானதுதான், அரசியல் சட்டதிட்டத்துக்கும் ஒழுங்குக்கும் ஏற்றதுதான் என்று தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டால்தான் தடைவிதிக்க முடியும் என்ற கருத்துடன் இருந்தார்.

பலாத்கார இயக்கம் என்பதற்கும்

கம்யூனிஸ்டு தொடர்பு உள்ள இயக்கம்

என்பதற்கும்

ஆதாரம் வேண்டும்! பிறகுதான் தடை விதிக்க முடியும் என்று அறிவிக்கிறார்; ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வருகிறது வெள்ளைப் பேரதிகாரிகளுக்கு.

நமது யோசனையை மீறுகிறான்!

நம்மை மதிக்க மறுக்கிறான்!

கருப்பருக்காகப் பரிவு காட்டுகிறான்!

உண்மையிலேயே ஆட்சி செய்ய நினைக்கிறான்!

வெள்ளை மாளிகையில் இருக்கிறோம் என்று இறுமாப்புக்கொள்கிறான்.

மாளிகையின் பெயர் வெள்ளைமாளிகை!

இவன் நிறம் கருப்பு! அதையே மறந்துவிட்டான்!

இவ்விதம் வெள்ளைப் பேரதிகாரிகள் எண்ணி இருந்திருப்பர், எரிச்சலாகத்தான் இருந்திருக்கும்.

நீக்ரோக்களின் உரிமைக் கிளர்ச்சியை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெற்றிகரமாக நடத்திச்சென்ற நீகரோ தலைவர் மார்ட்டின் லூதர் கிங் என்பார், ஒரு முறை, அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராக இருந்து மறைந்த மாவீரன், அவனிபுகழ் கென்னடியிடம் தொலைபேசி மூலம் கேட்டாராம், "குடிஅரசுத் தலைவர் அவர்களே! நிறபேதம் ஒழிக்கப்படவேண்டும் என் பதில் அக்கறை காட்டும் தாங்கள் வீற்றிருக்கும் மாளிகையின் பெயரே, வெள்ளை மாளிகை என்று இருக்கிறதே! பொருத்தமாக இல்லையே" என்று; கென்னடி, "அது நெடுநாட்களாக இருந்துவரும் பெயர்; வேறு பொருள் கொள்ளத் தேவையில்லை" என்று பதிலளித்தாராம்.

ஆனால் நிறவெறியர்கள், அவ்விதம் கருதுவதில்லை. வெள்ளை மாளிகை! என்ற பெயர் பொருத்தம் பார்த்து, பொருள் அறிந்து வைக்கப்பட்டதாகவே கருதுகின்றனர், அதற்கேற்றபடியே நடந்துகொள்கின்றனர்.

அந்த இயல்பினர், டில்மன் தன்னிச்சையாக நடக்கத் தலைப்படுவது அறிந்து, இனியும் விட்டுவைக்கக்கூடாது; தீர்த்துக் கட்டிவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்தனர். அவர்களின் முடிவைத ஊரிதப்படுத்துவதுபோல மற்றோர் சம்பவம் நடைபெற்றது டர்னரைட் இயக்கம் பற்றிய தகவல்களை விசாரிததறிந்து 'அறிக்கை' அளிக்கும்படி ஒருவரை, டில்மன் நியமிததார்.

நாங்கள் சொல்லுகிறோம்; எங்கள் வார்த்தையை நம்பாமல் விசாரணைக் கமிட்டி நியமிக்கிறாரா? அவ்வளவுக்கு வளர்ந்துவிட்டாரா? என்று கோபம் கொப்பளித்தது வெள்ளைப் பேரதிகாரிகளுக்கு.

டர்னரைட் இயக்கம்பற்றிய விசாரணை நடத்தும்படி நியமிக்கப்பட்டவர் யார் என்பது தெரிநததும், அந்தப் பேரதிகாரிகளின் ஆத்திரம் மேலும் சீறிக்கொண்டு எழுந்தது. ஏன்? என்று கேட்கிறாய், தம்பி! கொஞ்சம் பொறுத்துக்கொள்ளேன், அடுத்த கிழமை வரையில்.

அண்ணன்,

அண்ணாதுரை

# பாண்டியன் திருமேனி

மகளாகப் பிறந்தால், இரகசியமாக இருக்க வேண்டுமென்பது, இளவரசியாரின் கட்டளையோ? சரி சரி! சொல்லவேண்டாம், இப்பொழுது!'

'நன்ஞு, இப்பொழுது நீ என்ன சொல்லுகிருய்?'

'எதைப் பற்றிக் கேட்கிறீர்கள்?'

'அப்பொழுது சொன்னதற்குக் காஞ்சனு நம்பவில்லை, இப்பொழுது போய் இதை அவளிடம் சொல்லுகிறேன்!'

'பேசுவது எனக்குப் புரிந்தால் தானே?'

'அன்ருெரு நாள், நீ, நான், காஞ்சனு மூவருமாகப் பூந்தோட்டத்தில உட்கார்ந்து பேசினேம் அல்லவா?'

'ஒரு நாள் என்ன, அப்படிப் பல நாட்கள் பேசியிருந்திருக்கிரும்!'

'அப்படிப் பேசிய பல நாட்களிலே ஒரு நாளை உனக்குக் கவனப்படுத்துகிறன்! எங்களுக்கு மகன் பிறந்தால், உடனே ஒரு மகளைப் பெற்றுத் தந்துவிடுவதாக, நீ ஒத்துக் கொண்டாய் அல்லவா? எங்களுககு மகன் பிறந்துவிட்டானே, இப்பொழுது நீ என்ன சொல்கிருய்? எப்பொழுது நீ மகளைத் தருகிருய்—இப்பொழுதே அதைச் சொல்லிவிட வேண்டும்!'

'அது உன் மகனின் திறமையை அல்லவோ பொறுத்திருக்கிறது!'

'அப்படி என்ருல்?'

'அப்படியென்ருல், உம் மகன் பெரியவனுகி, ஊர் ஊராகச் சுற்றி, எனக்கொரு மனைவியை முதலில் கட்டிவைக்கட்டும்! பிறகு அவனுக்கு ஒரு மனைவியை நான் பெற்றுத் தரலாமா என்று, என் மனைவயைக் கேட்டுக்கொண்டு சொல்கிறேன்!'

'நன்ஞு, அடுத்த மாதமே உனக்குத் திருமணம் செய்துவிட, நான் முடிவுசெய்து விட்டேன!'

'ஏன், நான் சுதந்திரமாக இருப்பது உமக்குப் பிடிக்கவில்லையோ?'

'அந்தப்' பவழ வியாபாரி தன் மகளை உனக்கேதர வேண்டுமென்று தவங்கிடக்கிருனும்!'

'தவம்' செய்பவர்கள் எல்லாம் பொதுவாக யோக்கியர்களாக இருக்கமாட்டார்களே!'

'அவள் மனைவியும் உனக்கே தான் கொடுக்க வேண்டுமென்று ஒற்றைக்காலில் நிற்கிருளாம்!'

'அவள் ஒருவேளை நொண்டியாக இருக்கலாம்—ஒற்றைக்காலில் நிற்க!'

'அந்தப் பெண்ணின் மீது, உனக்கும் ஆசை என்பதை நான் அறிவேன்!'

'அதைப் பற்றி, இப்பொழுது என்ன அவசரம்!'

'இந்தா நன்ஞு, உனக்கு அவசரமில்லாமல் இருக்கலாம்! எனக்கு அவசரமாக இருக்கிறது — விக்கிரமனுக்குக் கல்யாணம் செய்துவிட வேணடுமென்று!...நன்ஞு, ஏதோ விளையாட்டிற்காக இப்படிப் பேசுகிறேன் என்று எண்ணுதே! உண்மையாகவே என் உள்ளத்திலி

**கே.ஜி. இராதாமணாளன்**

ருக்கும் ஆசையை நான் தெரிவிக்கிறேன்! நாம் எவ்வளவோ பழய முறைகளை எல்லாம் மாற்றவேண்டுமென்று தீர்மானித்திருக்கிரும்! அரச குடும்பத்தில் பிறந்த ஒருவன், அரச குடும்பத்தில் பிறந்த ஒருத்தியைத்தான் திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்ற வழக்கம் எனக்குப் பிடிக்கவில்லை!'

'அப்பொழுது தாங்கள் கொங்கு நாட்டு இளவரசியைத் திருமணஞ் செய்துகொண்டிருக்கக்கூடாது!'

'ஒத்துக்கொள்கிறேன்' நன்ஞு' காஞ்சனு பேரழகியாக இல்லாமலிருந்தால் — அவளைப் பற்றி முன்னரே கேள்விப் படாமலிருந்தால்... ஒரு சாதாரண குடியானவனின் மகளுக்குத்தான் நிச்சயமாக நான் மாலையிட்டிருப்பேன்! என் பாட்டனுர் காலத்திலிருந்தே, எங்கள் வாழ்விலும் தாழ்விலும் உன் குடும்பம் இரண்டரக் கலந்துவிட்டிருக்கிறது! படைத் தலைவராக இருக்கும் உன் அண்ணு ஆளவந்தாரின் திறமையையும் அன்பையும் பெற்று, இந்த அரசு வளர்ந்து வருகிறது? உன்னைப் போன்ற உண்மையான நண்பன் எனக்குவேறு எங்கிருந்து கிடைக்கப் போகிருன்? உங்களுக்கெல்லாம் நான் எப்படி நன்றி தெரிவிக்கமுடியும்? நன்றி தெரிவிப்பதற்கு இருக்கும் ஒரே வழி, உன் மகளை இந்தப் பாண்டிய நாட்டின் அரசியாக்குவதுதான் என்று நான் நினைக்கிறேன்!'

'இளவரசே உங்கள் அன்பு எனக்குத் தெரியாதா? ஆனுல் ஒரு சந்தேகம், அரசர்களின் அன்பு அப்படியே நிலைத் திருக்கக் கூடியதல்லவென்று, அனுபவத்தால் நெற்றியில் சுருக்கம்கண்ட பெரியவர்கள் கூறிவிட்டுச் சென்றிருக்கிருர்கள்! ஆகையால் தாங்கள் சிம்மாசனம் ஏறியபிறகும், இந்த அன்பு நிலைத் திருக்குமேயானுல், அதுவேபோதும் எங்கள் குடும்பததாருககு! அரசாங்கத்தின் ஆதரவினுல், சிறப்போடு வாழ்ந்து வருகிறது! தங்கள் ஆட்சிககாலத்திலும் அந்தச்சிறப்பு நிலைத்து நின்ருல் போதும்!'

'இதென்ன நன்ஞு, உன் பேச்சு விபரீதமாக இருக்கிறது! சிறுவனுக இருந்தது முதல் இந்தக் குலசேகரனை நீ அறிவாயே!'

'அறிவேன்—நன்ருக அறிவேன்—சிம்மாசனமிருக்கிறதே, அது ஒரு குரங்கைப் போன்றது! அதன மீது அமரும் மன்னர்கள் — மலர் மாலைகள்! குரங்கினிடம் அகப்பட்டுக்கொண்டால் மாலை, அதே அழகு நிலையோடு இருப்பதில்லை— இருகக முடிந்ததுமிலலை!

இப்படி நன்னன் கூறியதும், குலசேகரனின் முகம் திடீரெனறு— வெளுத்துவிட்டது!

'நன்ஞு இன்று சொல்கிறேன்—என் மகன் விக்கிரமன் பிறநதிருக்

திருக்கும் இந்தத் திருநாளிலே சொல்கிறேன்-என் ஆட்சிக் காலத்தில் உங்கள் குடும்பம் அரச குடும்பத்துக்குச் சமமாக உயர்ந்து விடும்!'

எங்கள் குடும்பம் அரச குடும்பத்திற்குச் சமமாக உயரவேண்டாம்—அது அழியாமல் இருந்தாலே போதும்!'

இதைக் கேட்டதும் குலசேகரனின் மனம் அதிர்ச்சி அடைந்தது. நண்பன் எதை மனதில் வைத்துக் கொண்டு, இப்படியெல்லாம் பேசுகிறுன் என்பது புரியாமல், அவன் உள்ளம் குழம்பியது!

## பதின்மூன்ரும் பகுதி

## பொய் ஓலை

"நன்னு! மகன் விக்கிரமன் பிறந்துருக்கும் இந்தப் பொன்னுளில் உனக்குச் சில வாக்குறுதிகளைத் தந்தால் அவற்றைப் புறக்கணிப்பதோடு மனம புண்ணுகும் விதத்திலும வார்த்தைகளைச் சிந்துகிருய்! 'எங்கள குடும்பம் அரச குடும்பத்திற்குச் சமமாக உயர வேண்டாம—அது அழியாமல் இருந்தாலே போதும!' எனறு கூறி ஆனநதததால் துள்ளிய என் மனதை அதிாச்சியால் கூம்பிக் குவியுமபடிச்செய்கிருய்! நன்னு, உன்மீது நான் எவ்வளவு நம்பிககை வைத்திருக்கிறேன்! அந்த நமபிககையில் நூற்றில் ஒரு பாகமாவது நீ என்மீது வைக்கலாகாதா?" என்று வேதனை நிறைந்த குரலில் கூறிக் கொணடே குலசேகரன் கட்டிலில்வந்து உட்கார்நதான்.

"மன்னிக்கவேண்டும் இளவரசே! தங்கள் மனம் இவவளவு புணணுகும் என்று தெரிநதிருந்தால் உகுதத அந்த வாாதததைகளை உளளத்திலேயே வைத்துக்கொணடிருப்பேன. உவப்போடு இருககும்போது உதவிகள் ஆயிரம செயவதாகத் தாங்கள் வாககுறுதி தருவீர்கள்! சோகமோ, கோபமோ வந்தவுடனே முன்பு சொன்ன சொல்லை முற்றும் மறந்துவிட்டு நன்மைக்குப்பதில் தீமையேகூட செய்து விடுவீர்கள்! ஆத்திரமும் ஏமாற்றமும் தங்கள் இதயத்தினுள் புகுந்துவிட்டால் தங்கள் கண்ணுக்கு மல்லிகைகூட கள்ளியாகத் தோன்றும்! கரும்பும் வேம்பாகிவிடும்! காலமெல்லாம் உடனிருந்த நண்பனும் பகைவனுகத் தெரிவான்! தங்களது இந்தக் குணத்தை அறியாதவன் அல்லவே நான்...வேற்ருனை ஒழிப்பதிலே வேங்கையெனச் சீறி எழுவீர்! விட்டேனு பார் என்று வீரம் பேசுவீர்! விண்ணதிர மண்ணதிர கொக்கரிப்பீர்! கண்களில் சிகப்பேற்றுவீர்! களங்கூட அமைத்துவிடுவீர். ஆனுல் ஏதாவது சபலத்தின் நிழல் இதயத்தின்மீது பட்டுவிட்டாலோ மும்முரிக்கப்பேசி முழக்கமிட்டதையும், முரசு கொட்டியதையும் முற்றும் மறந்துவிட்டு — குப்புறக் கவிழ்ந்து தலைகீழாக விழுந்துவிடுவீர்! இப்படி முன்னுக்குப் பின் முரணுக நீங்கள் மட்டுமல்ல, அரசபரம்பரையில் வந்த அனைவருமேநடந்து கொள்கிருர்கள்! அதுதான் அரசியல் தந்திரமென்றும் அப்பொழுது தான் அரசுக் கட்டில் ஆடாமல் அசையாமல் நிலைத்து நிற்குமென்றும் நம்புகிருர்கள்!" என்று சொல்லியபடி கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த ஓர் ஆசனத்தில் நன்னன் வந்து அமர்ந்தான்.



"நன்னு, அந்தப் பலஹீனத்தை நானும் அறிவேன்! ஆகவே, அப்படிப்பட்ட சபலம் என்ற சறுக்கு நிலத்திலும் மறதி என்ற இருட்டறையிலும் ஆணவம் என்ற படுகுழியிலும் நான் சாய்ந்து விழாமலிருக்க இரும்புபோன்ற உள்ளம் படைத்த உன்னை — எந்நேரமும் என் பக்கத்திலேயே இருக்கும்படி வேண்டுகிறேன்! நண்பா, நீ என் அருகில் இருந்தால், நான் மாசில்லாத மணியாக விளங்குவேன்! இது உறுதி!"

"நீங்கள் கழுத்தைப்பிடித்துத் தள்ளினுல்கூட, உங்களை விட்டு விட்டு நான் வேறு எங்கே செல்லப் போகிறேன்? செல்லத்தான் முடியுமா?" என்று சிரித்துக்கொண்டே கூறி, ஆசனத்தை விட்டெழுந்தான் நன்னன்.

"ஏன் நன்னு, இதற்குள் எழுந்து விட்டாய்?"

"இரவு அதிக நேரமாகிவிட்டதே — நீங்கள் தூங்கவேண்டாமா? நான் வருகிறேன், இளவரசே! வணக்கம்!"

"நன்னன் எனக்கு நண்பன் மட்டுமல்ல, கிடைத்தற்கரிய நல்லாசானுமாவான்!" என்று முணுமுணுத்தபடி, குலசேகரன் கட்டிலில சாய்ந்து படுத்தான்.

O

நாட்கள் ஓடின. ஆண்டுகள் நான்கு தேய்ந்து மறைந்தன. அந்த நான்கு ஆண்டுகளிலே, குலசேகரனின் வாழ்க்கையில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன!

தந்தை மாறவர்மன் சீவல்லபன் இறந்துவிடவே, சடையவர்மன் என்ற பட்டத்தோடு தென பாண்டி நாட்டின் மன்னனுகக் குலசேகரன், திருநெல்வேலியில் முடிசூட்டிக்கொண்டான்.

அப்பொழுது, பாண்டிய நாட்டின் வட பகுதியை—மதுரையைத் தலைநகராகக் கொண்டு — பராக்கிரம பாண்டியன் என்பவன் ஆண்டு வந்தான்.

தாயத்தினராகிய அவ்விரு பாண்டிய மன்னர்களுக்கு மிடையே, பகைமை முற்றியது. குலசேகரன் காலத்தில் மூண்ட பகைமைஅல்ல அது; அவன் தந்தை சீவல்லபன்காலத்திலேயே, தென் வட பாண்டியநாடு முழுவதையும் ஒரே சிமமாசனத்தில் அமர்ந்து ஒருவனே அரசாள வேண்டும் எனற ஆசையே, அந்தப் பகைமைக்குக் காரணமாகும்.

சீவல்லபன் இறந்ததும்—குலசேகரன் பட்டத்திற்கு வந்ததும்-பராக்

கிரம பாண்டியனின் மனதில் தூங்கிக்கொண்டிருந்த அந்தப் பழைய ஆசை துள்ளியெழுந்து தலைவிரித்தாடியது

"சடையவர்மன் குலசேகரன் வயதில் சிறியவன்தானே? மாலை நேரச் செக்கர்வானம்போல, இரத்தத்தால் சிவந்து, புலால் நாற்றம் வீசும் போர்க்களத்தில் அவனால் எவ்வளவு நேரம் நிற்கமுடியும்? யுத்த பூமியில் குவிந்திருக்கும் பிணங்களைத் தின்னவரும் பருந்துகள் கூட்டத்தைக் கண்டே, அவன் கண்கள் மிரளுமே! பரந்தொழிக்கும் முரசுகள், அவன் காதுகளைச் செவிடாக்கிவிடுமே! கொல்லும் கொம்புடைய யானைகளும், சிவந்த பிடரிமயிருடைய உயர்ந்த குதிரைகளும் பாய்ந்து வருவதைக் கண்டதுமே, அவன் மூளை குழம்பிவிடுமே!

பெருங்களத்தே அவனால் முடியுமா — நிற்க — போரிட, வெற்றி வாகை சூட?......கூரியவாள் ஏன்? நீண்டவேல் ஏன்? நிலம் அதிரும் யானைகள் ஏன? காற்றைக் கிழிக்கும் புரவிகள் ஏன்? கொடுமுரசு ஏன்? இந்தச் சின்னஞ்சிறுவனுக்காக இவ்வளவும் வேண்டுமா? இந்த வீணவேலையெல்லாம் எதற்கு! ஒரு சிறு சூழ்ச்சி — அதுபோதுமே அந்த அரும்புமீசைக்காரனை ஆவென்று அலறச் செய்ய! அதன் பிறகு — மன்னா ஏறே மறவர் கவசமே என்று என் பாதங்களைப் படித்துக்கொண்டு, மன்னிப்புக் கேட்கமாட்டானா? அடைக்கலம் அடைக்கலம் என்று அழுது நிற்க மாட்டானா!

சீவல்லபனின் மகனைச் சிறையில் தள்ளி அடைத்த பிறகு, பரந்த இந்தப் பாண்டிய மண்டலத்தின் ஏகச்சக்கரவர்த்தி நான்தானே? என்று பராக்கிரமபாண்டியன் மனக்கோட்டை எழுப்பினான்.

திருநெல்வேலியை முற்றுகையிடவேண்டும் என்ற திட்டத்தோடு பராக்கிரமன் அதிதீவிரமாக ஏற்பாடுகள் செய்கிறான் என்ற செய்தி ஒற்றர்கள் மூலமாகக் குலசேகரனுக்குக் கிடைத்தது. ஆகவே அவன் போர்க்கருவிகளைப் புதுப்பிக்கவும், போர் வீரர்களுக்குப் பயிற்சி தரவுமான காரியங்களில் மும்முரமாக ஈடுபட்டான்.

அந்தச் சமயத்தில காஞ்சனமாலையின் தந்தையான கொங்குநாட்டரசர் மரணப்படுக்கையிலிருப்பதாக ஒரு ஓலை வந்தது அதைக் கண்டு காஞ்சனா கண்கலங்கினாள். கொங்கு நாடு சென்று உடனே தந்தையைப் பார்க்கவேண்டுமென்று அவள் துடித்தாள்.

"நன்னா, மாமாவின் உடல் நலம் திடீரென்று மிகவும் மோசமாக இருக்கிறதாம்! காலைதான் ஓலை வந்தது! இன்றிரவு நானும், காஞ்சனாவும கொங்கு நாடு செல்கிறோம!"

"வேண்டாம் அரசே, பகைவன் பாய நினைக்கும் இந்த நேரத்தில் தாங்கள் தலைநகரில் இல்லாமலிருப்பது சரியல்ல. கொங்கு நாட்டிற்குத் தாங்கள் சென்றிருக்கிறீர் என்ற தகவல் கிடைத்தால், அந்தக் கெடுமதியாளன் திடீர் தாக்குதல் நடத்தி, திருநெல்வேலியைப் பிடித்துவிடத் துணிவான்!"

"காஞ்சனா கவலையடைகிறாளே-கண்ணீர் வடிக்கிறாளே-சாகக்கிடக்கும் அப்பாவைப் பார்க்கவேண்டுமென்று!"

"அரசியாரை மட்டும் முதலில் அனுப்பிவையுங்கள் — அவசியமானால் பிறகு தாங்கள் செல்லலாம!"

"வழியில் பகைவர்களால் ஏதாவது ஆபத்து நேரிட்டால?"

"அதுவும உண்மைதான்! அரசியாருக்குத் துணையாக, நான் வேண்டுமானால் செல்கிறேன்!"

"நல்லது நன்னா, இன்றிரவே புறப்படுங்கள்!"

காஞ்சனமாலை கொங்கு நாட்டிற்குப் புறப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு, பராக்கிரமனின் ஆட்கள் தென்பாண்டி நாட்டின் எல்லைப்புறக் கிராமங்களில் தீ வைக்கவும், கொள்ளையடிக்கவும் ஆரம்பித்தனர்.

அதைக் கேள்விப்பட்ட குலசேகரன் வெகுண்டெழுந்தான். மதுரையையே தகனம்செய்துவிடவேண்டுமென்று கொக்கரித்தான. பக்கத்திலிருந்த படைத்தலைவர் ஆளவந்தாரைப் பார்த்து, "இன்றே நம் படைகள் மதுரையை நோக்கிப் புறப்படவேண்டும்!" என்று தோள்கள துடிக்க, கண்கள் சிவக்கக் கூறினான்.

"ஆத்திரம் வேண்டாம் அரசே! இன்னும் சில நாட்கள் பொறுத்தே நாம மதுரையைத் தாக்கவேண்டும்!" என்றார் ஆளவந்தார், சாவதானத்தோடு

படைத்தலைவரின் இந்த எதிர்பாராத பதிலைக்கேட்டு குலசேகரன் அதிர்ந்துபோனான,

[ வளரும் ]

## 'அவசரநிலை' நீடிக்கலாமா?

பாதுகாப்பு விதிகள் தருகின்ற அதிகாரம், உண்மையில் தேசப் பாதுகாப்புக்குப் பாதகமான விவகாரங்களில்தான் பிரயோகிக்கப் படுகின்றன என்பதில்லை. தேச நலன் என்ற பெயரால் பல்வேறு வகைகளில் அவை துஷ்பிரயோகம் ஆகின்றன என்பது அடிக்கடி கிளம்பும் புகார். இந்த அதிகாரங்கள் இருக்கும்வரை ஜீவாதார உரிமைகளை கோர்ட்டின் மூலம் உறுதி செய்துகொள்ள முடியாது. இது பிரஜைகளுக்குப் பல அநீதிகளை விளைவிக்கக்கூடும். ஆகையால் தான் "ஜனநாயக வாழ்க்கை வழிக்கு ஆதாரமாயுள்ள அடிப்படை நியதிகளை நாளடைவில் இவை மிகப் பெரிய அளவில் அச்சுறுத்தக்கூடும்" — என்று பிரதம நீதிபதி கூறி எச்சரித்துள்ளார்.

பாதுகாப்பு விதிகளின்படி மத்திய. ராஜ்ய சர்க்கார்கள் மட்டுமின்றி கீழ் அந்தஸ்துக்களிலுள்ள சில்லறை அதிகாரிகள்கூட, தேச நலனின் பெயரால். பலவிதங்களில் கடைமுறைகளை விதித்துக்கெடுபிடிச் செய்யலாம். நமதுராஜ்யத்திலேயே உணவுப் போக்குவரத்து விஷயத்தில் இம்மாதிரி கீழ் மட்டத்தில் நடந்து விவகாரம் கோர்ட்டுகளுக்கு வந்திருக்கிறது. தேசப் பாதுகாப்புக்கு அல்லது தேச நலனுக்கு அவசியமில்லாத காரியங்களுக்கு சாதாரண சட்டங்களை உபயோகிக்கக்கூடிய கேஸ்களிலும் இந்த விதிகள் பயன்படுகின்றன என்ற புகார்கள் வந்துள்ளன. தவிர இதன்படி சிறைப்பட்ட பலரின் விடுதலைக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் மறு பரிசீலனை செய்வதுதான் நியாயம்.

சீனாவின் அச்சுறுத்தல் நீடிப்பதால் அவசர நிலைமைப் பிரகடனம் தரும் அதிகாரங்கள் நீடிக்கவேண்டும் என்பது பொருளற்றதாகிவிட்டது. சீன ஆபத்து. இன்றைய நிலையில் முடிவில்லாத ஒன்றாகி விட்டது. அதைச் சமாளிப்பதற்கு இந்த விசேஷ விதிகள் தேவைப்படும் நிலைமை இன்று இல்லை. அதை இப்பொழுது ரத்துச் செய்துவிடுவதால் நஷ்டமொன்றுமில்லை; பிறகு அவசியம் நேரிட்டால் மீண்டும் பிரகடனம் செய்துகொள்ளலாம். தவிர, விசாரணையின்றி காவலில் வைப்பது உட்பட, உண்மையில் தேவைப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சாதாரணச் சட்டங்களே அரசாங்கத்துக்குப் போதிய அதிகாரம் தருகின்றன.

[பிப் 20-ல் தினமணி தலையங்கம்.]



கா. வேழவேந்தன் பி.ஏ.பி.எல்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தலையில்பட்ட சம்மட்டி அடி போலான அந்தக் கடிதத்தை மீண்டும் படித்தேன்.

உயிருக்குயிரான அத்தானுக்கு,

ஆயிரம் வணக்கங்கள். உங்களை இந்த மடலின் மூலம் ஒரு இலட்சம் முறையாவது 'அத்தான், அத்தான்' என்று அழைத்து ஆறுதல் அடைந்துவிடுகிறேன். ஏனெனில் மீண்டும் அப்படி அழைக்க முடியுமா என்ற ஐயப்பாடு தோன்றி விட்டது. வண்ணச் சிலை வடிவம் பெறும் நேரத்தில், கல்லின் துகளே கண்களில் தெறித்துப் பார்வையைப் பறித்துவிட்டால், அதை உருவாக்கிய சிற்பி எப்படித் துடிப்பானோ அதைக் காட்டிலும் மிகுதியாகத் துடிக்கிறேன்.

அத்தான்! நடக்கக் கூடாதது நடக்கப் போகிறது! நம்ப முடியாத கனவு நான்கு பேர் சாட்சியத்துடன் நினைவாகப் போகிறது!

நீண்ட நாட்களாக நண்டு ஒன்று பாடுபட்டுத் தோண்டிய வளையில நீர்ப்பாம்பு வந்து குடிபுகுந்துவிடுவதில்லையா?

அத்தான்! நாமும் அப்படித்தான் ஆகிவிட்டோம்!

எதை மூடி மூடி மறைக்கவேண்டுமென்று இதயத்தின் அடித்தளத்திலே ஒளித்து வைத்தோமோ, அதை எண்ணூறு அடி ஆழத்திற்குக் குழிவெட்டிப் புதைத்தே விட்டார்கள்.

இந்தக் கடிதத்தைப் படிக்கின்ற நேரங்கூட நீங்கள் தாமதிக்கக் கூடாதே என்பதற்காக நான் மடலை விரிவாக எழுத விரும்பவில்லை; எழுத என் இதயத்திலே தைரியமுமில்லை. நேரில் அறிய உடனே பறந்து வாருங்கள்.

நீங்கள் விரைந்து வந்தால்தான் நம் காதற்சோலையைத் தீய்த்துக் கரியாக்கவரும் பெருந்தீயை அணைக்கமுடியும். இல்லையேல் எல்லாமே சாம்பல் மேடாகிவிடும்.

வேறு என்ன கூறப்போகிறேன்.

தங்கள்,

**தங்கம்.**

முடங்கலைப் படித்து முடித்த நான் நடுநடுங்கிப் போனேன். எப்பொழுதோ நேச நாடுகள் வந்து, இதே பெர்லினில் வீசிய போர்விமானக் குண்டுகள் இப்போது என் தலையிலே பொழிவதாகவே இருந்தது.

என்ன நடந்திருக்கும்? என்ன நடந்திருக்கும்?

இந்த வினாக்கள் என் நெஞ்சத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தெடுத்தன.

'ஐயோ! இந்தப் பாழும் சங்கம் விவரத்தைக்கூட எழுதவில்லையே' என்று வாய்விட்டு அலறினேன்.

'ஆம். அதுதான் நடந்திருக்கும்' 'அத்தை மகன்.' 'அம்மான் பிள்ளை' என்று கூறிக்கொண்டு எவனோ வந்திருப்பான். அவன் கையில் என் அன்னத்தைப் பிடித்து ஒப்படைக்க முனைந்துவிட்டார்கள்' என்ற முடிவுக்கு வந்தேன்.

வாழ்க்கையிலே தூயதிருமணம் என்பது வாழைமரம் குலை தள்ளுவதற்கு ஒப்பாகும் என்பது எங்கள் கருத்தாயிற்றே!

அப்படியானால், தங்கம் எழுதிய மடலின் செய்தி, செயலாக உருவாகுமானால், நானெங்கே? தங்கமெங்கே?

இந்த இதய பாரத்தை இறக்கி வைக்கக்கூட ஒரு சுமைதாங்கி இல்லாமல் விமான நிலையத்திற்கு ஓடினேன்.

இந்தியா திரும்புவதற்கு விமானத்திலே இடமில்லை என்று பதில் வந்தது.

உடனே திரும்ப வழியில்லையே என்று பதறினேன்,

ஒரு வாரங் கழித்துப் புறப்படும் விமானத்திற்குரிய டிக்கட்டிற்குப் பதிவு செய்துகொண்டு அறைக்குத் திரும்பினேன்.

O

திரைப் படத்திலும் நாடகத்திலும் கதாநாயகன் விரைந்து வருவதற்குள், கதாநாயகியின் கழுத்தில் மாற்றான் ஒருவனின் தாலி ஏறி அமர்ந்து கொள்ளுமல்லவா? அம் மாதிரிக் கொடுமைக் காட்சிகள் என் கண்ணெதிரே தோன்றிப் படாதபாடு படுத்தின.

ஓடோடியும் என் கிராமத்தை அடைந்து, வீட்டையும் நெருங்கி விட்டேன்.

உள்ள சூழ்நிலையைக் கண்டதும் அதிர்ச்சி என் தொண்டையை அடைத்தது.

ஆம் என்வீட்டெதிரிலேயே மண விழாப் பந்தல் போடப்பட்டிருந்தது. திருமணக் கோலத்தை உருவாக்கும் நாதசுர ஒலி அங்கிருந்துதான் எழுந்து வந்து கொண்டிருந்தது.

கண்களைக் கசக்கிக் கொண்டேன். என் வீட்டை நெருங்க, நெருங்க, தங்கம் எழுதிய கடிதத்திற்கு ஏற்ப, ஏதோ விபத்து ஏற்பட்டுவிட்ட அறிகுறிகள் தென்பட்டன.

கால்கள் பின்னலிட வாயிற்படியை அடைந்த நான் உள்ளே எட்டிப் பார்த்தேன். மணமேடையில் என் சிற்றப்பாவே அமர்ந்திருந்தார்!

அருகிலே மணமகளாக அமர்ந்திருப்பவள் என் தங்கம்தானோ என்று பார்த்தேன்.

ஆனால்......?

அருகே மணமகளாக என் தங்கம் அமர்ந்திருக்கவில்லை தங்கத்தின் தமக்கை மரகதம்தான் என் சிற்றப்பா அணிவித்திருந்த மங்கல நாணுடன் காட்சியளித்தாள்! அவள் பின்னாலே என் காதற்சிலை கண்ணீருடன் நின்றிருப்பதைப் பார்த்தேன்!

என் மண்டையிலே ஆயிரம் செந்தேள்கள் ஒரே நேரத்திலே பாய்ந்து கொட்டுவதுபோல இருந்தது எனக்கு!

"வா, தம்பி! வா." என்று என் சிற்றப்பாவுடன் சேர்ந்து அனைவரும் வரவேற்றார்கள்.

யார் யார் என்ன சொல்லி வரவேற்றார்கள் என்ற சொற்களா என்செவிகளில் விழப்போகின்றன?

எப்படி மரகதம் திடீரென்று என் அன்னையாகிவிட்டாள் என்ற புதிர் தான் என் நெஞ்சத்தைப் பிழிந்தெடுத்தது.

(4-ம் பக்கத் தொடர்ச்சி

என்று அடிக்கடி செய்திகள்—அவைகளை ஒட்டி கண்டனங்கள்; மறுப்புகள்; மறுப்புக்கு மறுப்புகள்!

இங்நிலையில், பதவியில் இருப்பவர்களிடம் பயம் இருக்கும் அளவுக்குப் பாசம்இருந்திட முடியாதல்லவா? இல்லை!

ஆகவே இன்று ஜனநாயகம் செம்மையாகச் செயல்படாததற்குக் காரணமாக இருப்பது, பயம்! என்ன செய்துவிடுவார்களோ என்ற பயம்! இவர்களை மாற்றமுடியுமா என்றசந்தேகத்தின்பேரில் எழும்பியுள்ள பயம்! இவ்வளவு கெட்டியாக இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டனரே, எப்படி அவர்களை அகற்றமுடியும் என்பதிலே ஒரு பயம்!!

இந்தப் பயமும், பதவியில் இருப்பதால், அவர்களைப்பற்றி மனமயக்கம் ஏற்படும்படி செய்யப் பட்டு வரும் பிரசாரமும் சேர்ந்து, மக்களிடையே ஒரு தயக்கத்தை மூட்டி விடுகிறது.

தி. மு. கழகம், இந்தப் பயமும் மன மயக்கமும் சமுதாயத்திலிருந்து போக்கப்படுவதற்கான முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. அந்த முயற்சியில் பெருமைப் படத்தக்க அளவிலும் வகையிலும் வெற்றி கிடைத்தபடி இருக்கத்தான் செய்கிறது.

பெரிய இடத்தில் உள்ளதனாலேயே, அவர்கள் பேராற்றல் படைத்தவர்கள் என்று கூறிவிடுவது, பேதமை. ஆனால் அத்தகைய மனமயக்கம் மிகப் பலருக்கு எழும்.

சேலம் மாவட்டத்தில் உள்ள 'பொய்மான்' கரடு பலருக்கு வியப்பளிககிறது. ஒரு குறிப்பிட்ட தொலைவில் இருந்து பார்க்கும்போது, குனறின் குகைவாயிலில் கதிரவன் ஒலியால் ஏற்படும் நிழல், மான் உருவில் அமைகிறது; பொய்மான கரடு என்ற பெயர் அதனாலேயே இருந்துகொண்டு 'வேடிக்கை' காட்டுகிறது.

'பொய்மான் கரடு' போன்றதுதான் பதவியிலும் பெரிய இடத்திலும் உள்ளவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்துபார்க்கும்போது தெரியுமதோற்றம்; ஏற்படும் மனமயக்கம், அருகே நெருங்கிப் பார்ததாலும் தெரிவதில்லை; தொலைவிலே இருந்து கொண்டாலும் தெரிவதில்லை.

கணக்கேடு, மறுகடிதம், புகார்க் குறிபபு, லைசென்சு பர்மிட் ஆகியவைகளுக்கான பேட்டி காணுதல், எனும் இந்த 'நிலையில்' நின்று பார்க்கும்போது 'பொய்மான்' தெரியத்தான் செய்யும்.

திராவிடமுன்னேற்றக் கழகம், தயவு தாட்சணியத்தை நாடாமல் பதவியாளர்களிடம் பலன் பரிசு கேளாமல், எட்ட நின்று மக்கள் தொண்டாற்றுவதால் அந்தப் 'பொய்மான்' தெரிவதில்லை,

'பொய்மான்' கண்டவர்கள் கதை கதையாகச் சொல்லி முன்பு மக்களிடம் ஒரு மனமயக்கத்தை ஊட்டிவிட்டதுபோல இப்போது பதவிப் பொய்மான் கண்டவர்கள மக்களிடம் அவர் செல்வாக்கு என்ன தெரியுமா! அவர் ஆற்றல் என்ன தெரியுமா! அவர் யாருக்கும் அஞ்சமாட்டார் தெரியுமா! அவர் திரிகால ஞானி தெரியுமா! எந்தப் பிரச்சினையையும் எட்டே வார்த்தையில் விளக்கிவிடுவார் தெரியுமா! என்றெல்லாம் 'கதை' அளக்கிறார்கள்.

அதனால் ஒரு விதமான மனமயக்கம் படர்ந்து விடுகிறது.

என்ன ஆகுமோ என்ற பயம், ஏதேதோ சொல்லுகிறார்களே என்பதால் படரும மனமயக்கம் எனும் இரண்டினையும், விரட்டிவிட்டால், ஜனநாயகக் கடமையினைச் செய்து முடிக்கும் ஆற்றலை மக்கள் எடுத்துக் காட்டுவார்கள். தி. மு கழகம் அதனை செய்திட முடியும்; செய்து வருகிறது; செயலில் மேலும் மும்முரம் தேவை.

இத்தனைப்பயம்மனமயக்கம்படர்ந்திருந்தும்,பொது மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள பலியாகிவிடவில்லை; காங்கிரசுக்கு ஓட் அளிததவர்கள் நூற்றுககு நாற்பது என்ற அளவினரே. பெரும்பாலானவர்கள் 'பொய்மான்' கரடு என்றால் என்ன என்பதைப் புரிந்து கொணடுவிட்டனா என்ற பேருண்மையை நினைவிற கொண்டு, கழகம் மேலும் உறுதியுடனும் உற்சாகத்துடனும், ஜனநாயக வெற்றிககாக அரும்பணியாற்றிட வேண்டும்.

❋

---

என் சிறறப்பாவிடம் பட்ட கடனைத் திருப்பித தர முடியாமல் தங்கத்தின் தந்தை பரிதவித்த சூழ்நிலையும், தனக்கென்று தாலி கட்டியவள் ஒருத்தி இருந்தால் ஒத்தாசையாக இருக்குமே என்று என சிற்றப்பாவுககு ஏற்பட்ட நப்பாசையுமே இநதக் கோர விபத்துக்குக் காரணம என்று தெரியவந்தது.

தங்கத்தின் தமக்கை மரகதம் என் தாயாகிவிட்டாள! நான் அவளுக்கோ பெறாத மகனாகிவிட்டேன்!

நினைத்தே பார்க்க முடியவில்லை; தமக்கையைத் தநதையும தங்கையை மகனும மணந்து ஒரே குடும்பத்திலே வாழ எஙகள சமுதாயம் ஒப்புககொள்ளுமா? முடியத்தான் இயலுமா?

○

இரவு வந்தது.

அமாவாசை காலத்தின் கைவண்ணததால், வையமே கரும்பஞசால அடைக்கப்பட்டதுபோல இருண்டு கிடந்தது.

ஆற்றோரமடையை நோக்கி நடந்தேன்.

நான் சொல்லி வைத்தபடி என் அன்புமயில் தங்கமும் வந்துவிட்டாள்.

"கண்ணே!" என்றேன்.

"அத்தான்...!" என்று அழைக்க முடியாமல் அவள் வாய் குழறியது.

இருவரும சுற்றும் முற்றும பார்த்துக்கொண்டோம்.

நான் தயாராகக் கொண்டுவந்திருந்த கயிற்றை இரணடாக அறுத்து, அதே நாவல் மரத்தின் கிளையில் சுருக்கு முடிபோட்டுக் கட்டினேன்.

மாலையை மாற்றிக்கொள்ள வேணடிய கழுத்துககளில் சுருககுக கயிறுகளை மாறறிக கொணடோம!

தங்கம பேசினாள: "அத்தான்! நினைவிருக்கிறதா உங்களுக்கு? சென்றமுறை இதே நாவல் மரத்தின் இதே கிளையிலிருந்து நீஙகள பழுத்த குலையை அறுததுப் போட்டீாகள்; பாதிக்குலை மாட்டுச்சாணத்திலே விழுந்துவிட்டதால் மீதிக் கனிகளும் வேண்டாம் என்று நீங்கள்தான தடுத்துவிட்டீர்கள இல்லையா?"

அந்த இறுதி உரையின் பொருள் நன்றாக விளங்கியது. புன்னகையும் கண்ணீரும் எங்கள் முகத்திலே வழிந்தோடின.

இனி எந்த உலகத்திற்குப் போனால் நாஙகள் காதலர்களாகவே வாழமுடிமோ அங்கே புறப்பட வேணடாமா?

ஒருவரையொருவர் கட்டியணைத்தவாறே அந்தச் சொர்க்க ஓடையில் குதித்துவிட்டோம. எஙகள் உறவுமுறைபற்றிப் பேசிப் பிரிக்க யாரா தொடர முடியும?




சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால்